பக்கங்கள் : 16
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 033 வள்ளுவர் ஆண்டு 2053 தை 08 வெள்ளிக்கிழமை (21.01.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




இலங்கையில் உள்ள அனைத்து

## மனித் உரிமை பிரச்சினைக்கும் தீர்வு காணமுடியும்

### ஜனாதிபதியிடம் பிரித்தானிய அமைச்சர்



(கொழும்பு)

இலங்கையில் உள்ள அனைத்து மனித உரிமை பிரச்சினைக்கும் தீர்வு காண முடியும் என தெற்கு, மத்திய ஆசியா, ஐ.நா. மற்றும் பொதுநலவாயத்துக்கான பிரித்தானிய அமைச்சர் ஜனாதிபதி கோட்டாவிடம் நேரில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியை நேற்று சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மனித உரிமைகள் தொடர்பாக இலங்கை முன்னெடுத்துவரும் வேலைத் திட்டங்கள் மிக முன்னேற்றகரமாக உள்ளன.

அதனை மேலும் வலுப்படுத்துவதற்கு, நடைமுறை மற்றும் இலக்குகளை அடையக்கூடிய அணுகுமுறை

15

## புலம்பெயர் மக்களுடன் பேச விரும்புகின்றேன்

### ஜனாதிபதி கோட்டா

(கொழும்பு)

பிரித்தானியாவில் வசிக்கும் இலங்கையின் புலம்பெயர் மக்களுடன் கலந்துரையாடுவதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தருமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பிரித்தானியாவின் தெற்காசிய மற்றும் பொதுநலவாய அபிவிருத்தி விவகாரங்களுக்கு பொறுப்பான அமைச்சர் தாரிக் அஹமட்டிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை

15

வல்வெட்டித்துறையில்

## நெருப்பில் எரிந்த பெண் உயிரிழப்பு

(கரணவாய்)

நெருப்பில் எரிந்த வயோதிப மாது ஒருவர் உயிரிழந்த சம்பவம் ஒன்று பொலிகண்டி, வல்வெட்டித்துறையில் நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்

15

## திட்டமில்லாமல் அரசு ஆட்சியை நடத்துகின்றது

### ஐ.தே.க. தலைவர் ரணில் குற்றச்சாட்டு

(கொழும்பு)

திட்டமில்லாமால் ராஜபக்ச அரசாங்கம் ஆட்சியை நடத்தி வருவதாக ஐ.தே.க. தலைவர் ரணில் விக்ரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, தனது அக்கிராசன உரையில் எடுத்துரைத்த விடயங்களை விட இலங்கை நாடு, பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாகவும்

15

## தமிழர்களின் அபிலாசைகளை நிறைவேற்ற வேண்டும்

### பிரித்தானிய அமைச்சரிடம் கூட்டமைப்பு எடுத்துரைப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என பிரித்தானிய அமைச்சரிடம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எடுத்துரைத்துள்ளது.



தெற்கு, மத்திய ஆசியா, ஐ.நா. மற்றும் பொதுநலவாயத்துக்கான பிரித்தானிய அமைச்சர் தரீக் அகமட் தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவர் இரா. சம்பந்தனை நேற்று

15

## ராஜபக்ச அரசால் வெளிநாட்டுக்கு தப்பிச்செல்லும் இளைஞர்கள்

### சபையில் சஜித் சாடல்

(கொழும்பு)

இலங்கையிலுள்ள இளைஞர்களை கோட்டாபய அரசு வெளிநாட்டுக்குத் துரத்தியுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபையில் நேற்று தெரிவித்தார்.

அவர் மேலும்

15

## தமிழர் விவகாரம் உட்பட பல விடயங்கள் தொடர்பில்

### பசிலுடன் ஜெய்சங்கர் மீண்டும் பேச்சு

(கொழும்பு)

இலங்கைத் தமிழர் விவகாரம் உட்பட பல விடயங்கள் தொடர்பில் நிதி அமைச்சர் பசில் ராஜபக்சவுடன், இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர் மீண்டும் பேச்சு நடத்தியுள்ளார்.

இலங்கையுட

15

## சர்வதேச வர்த்தக கண்காட்சி யாழில் இன்று ஆரம்பம்

→6

## அரச கூட்டணியிலிருந்து வெளியேறுவதா? இல்லையா?

### மகாநாயக்க தேரர்களை சந்திக்கவுள்ள சுதந்திரக் கட்சி

(கொழும்பு)

கடுமையான அரசியல் நெருக்கடியை எதிர்கொண்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசியும், ஆலோசனையும் பெறுவதற்குத் திட்டமிட்டுள்ளனர்.

இதன் பிரகாரம் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான குழுவினர் விரைவில் கண்டி சென்று, மகாநாயக்க தேரர்களைச் சந்திப்பார்கள் என கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலை

15

ஜனாதிபதி விடுத்த அழைப்பை

## தமிழ் அரசியல்வாதிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும்

### டிலான் பெரேரா கோரிக்கை

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தின் ஊடாக இனப்பிரச்சினைக்கு

15

கொரோனா

## 12 மரணம் 827 தொற்று

(கொழும்பு)

நாட்டில் மேலும் 12 கோவிட் மரணங்கள்

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

யாழ்.இந்து 1976, திருவாதிரை, 7ல் செவ்வாய், சூரியன் செவ்வாய், பாவம் 44, 2ம் பாதம் பிறந்த மணமகனுக்கு மணமகள் தேவை.

(9761)

**077 843 5440**

# மக்களின் தேவைகளை நிறைவேற்ற முன்வாருங்கள்

## அமைச்சர் நாமல் அழைப்பு

(கொழும்பு) மக்களின் தேவைகளை நிறைவேற்ற முன்வாருங்கள் என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

நேற்றுக் காலை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"அரசியல் தலைவர்கள் புத்திசாலித்தனமாகச் செயற்பட வேண்டும். அமைச்சரவைக் கூட்டத்தில் அல்லது ஆளும் கட்சிக் கூட்டத்தில் மாத்திரமே தமது கருத்துக்களை வெளிப்படுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நாட்டு மக்கள் எங்களுக்கு வாக்களித்தது ஒவ்வொருவரும் அரசனாகுவதற்கு அல்ல. எனவே ஜனாதிபதியை தெரிவு செய்தால் அந்த ஜனாதிபதியின் கொள்கையை பின்பற்ற வேண்டும்.

நாம் அனைவரும் தனித்து ஆட்சியமைக்க முயலாமல் மக்களை ஆள முயற்சித்தால் சிறப்பாக இருக்கும்.

இந்த நேரத்தில் நாம் ஒவ்வொருவரும் தனித்தனியே அரசனாவதற்கு போராடுவதை விடுத்து, மக்கள் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றினால் இந்நாட்டு மக்களை அரசர்களாக்க முடியும் என நினைக்கின்றேன்.

எனவே, தனிப்பட்ட கருத்துகளை ஒதுக்கிவைத்து விட்டு, மக்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம்
04 . 11 . 1945

மறைவு
24 . 12 . 2021

கடந்த 24.12.2021 வெள்ளிக்கிழமை அல்லாரை அறுகம்புல விநாயகன் தாழடைந்த எமது குடும்பத் தலைவர்

### திரு. நாகநாதி மகாலிங்கம்

(ஓய்வுநிலை இ.போ.ச நடாத்துநர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (21.01.2022) வெள்ளிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக் கிரியைகள் நாளை மறுதினம் (23.01.2022) ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகைதந்து ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம். (இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்)

சிற்றம்பலம் வீதி,
மீசாலை கிழக்கு, மீசாலை.

(9757)

தகவல்:
குடும்பத்தினர்

## வேலையாட்கள் தேவை



யாழ்.நகரில் இயங்கும் ஹோட்டல் / விடுதிக்கு வேலையாட்கள் தேவை

**வரவேற்பாளர் (ஆண்)**
**சமையலாளர் (பெண்)**

- காலை 6 மணி தொடக்கம் 11 மணிவரை.
- காலை உணவு மற்றும் மதிய உணவு தயார்படுத்தல்.

(9759)

தொடர்புகளுக்கு:-
**077 817 7817**

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை சிரேஷ்ட ஆசிரியை
திருமதி **வளர்மதி அமரகுலசிங்கம்** அவர்களின் அன்புக் கணவர்

அமரர்

### ஐயாத்துரை அமரகுலசிங்கம்

தோற்றம் : 1962.11.09 மறைவு : 2022.01.20

அவர்கள் காலமான செய்தி அறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/மல்லாகம் மகா வித்தியாலயம் - மல்லாகம்

(9758)

## மரண அறிவித்தல்



பிறப்பு
17 . 07 . 1943

இறப்பு
20 . 01 . 2022

### திருமதி சரஸ்வதி கிருஸ்ணபிள்ளை

நீதிமன்ற வீதி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி கிருஸ்ணபிள்ளை அவர்கள் நேற்று (20.01.2021) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதி - கண்மணி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற மாரிமுத்து கிருஸ்ணபிள்ளையின் அன்பு மனைவியும் பிரதீபா (பிரதிக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி கல்வி வலயம்), நிக்சலா (லண்டன்), ஜெனார்தனன் (ஜேர்மனி), பாமீதனன் (சின்னன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கருணாகரன் (லண்டன்), செல்வமதி ஆகியோரின் அன்பு மாமியாரும் தீபிகாவின் (லண்டன்) அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21.01.2022) வெள்ளிக் கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீதிமன்ற வீதி,
மல்லாகம்.

(9760)

தகவல்: குடும்பத்தினர்
077 264 0368, 077 162 0638

## பத்தாவது ஆண்டு நினைவு நாள்



மண்ணில்
04 - 05 - 1950

விண்ணில்
11 - 02 - 2012

### அமரர் கந்தையா தபேந்திரன்

(முன்னாள் நிதி உதவியாளர் - பிரதேச செயலகம், கரவெட்டி)

"தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்"

என்ற பொய்யாமொழியான் கூற்றை உமதாக்கி
உங்களை உருக்கி எம்மை ஆளாக்கினீர்களே...
எங்கே போய்த் தேடுவோம் அப்பா...
உங்கள் கனிந்த முகத்தையும் மென் சிரிப்பையும்...

"சாய் இல்லம்"
[illegible]மத்தி,
கரவெட்டி.

(C-3586)

உங்கள் கொள்கைகளை மனத்திருத்தி
உங்கள் வழியில் வாழும்
உங்கள் குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஷ்டி முறையிலான தீர்வே இனப்பிரச்சினையைத் தீர்க்கும்

## பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன்



(யாழ்ப்பாணம்)

**ஜனாதிபதியின் கொள்கை பிரகடன உரை தமிழ்த் தேசிய இனப்பிரச்சினை சம்பந்தமாக எதுவுமே கூறப்படவில்லை. அத்துடன் வடக்கு- கிழக்கு மக் கள் பிரதிநிதிகள் தமது கொள் கைகளை ஓரங்கட்டிவிட்டு தனது செயற்பாடுகளுக்கு முழுமையான ஒத்து ழைப்பைத் தர வேண்டும் எனக் கூறியமை ஏற்றுக் கொள்ள முடியாத விடயம் என பாராளுமன்ற உறுப் பினர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.**

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரைக்கு பதில் வழ ங்கும் முகமாக ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக் கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது கொள்கைகள் என்பது எமது மக்களின் அபிலாசை களை பிரதிபலிப்பது தான். சுத ந்திரம் பெற்ற நாள் தொட க்கம் சமஷ்டி முறையிலான நியாய மான தீர்வு என்பதனை தெளி வாக கூறியிருந்தும் அதனை ஓரங்கட்டிவிட்டு அபிவிருத்தி செய் வதில் எந்த பயனும் இல்லை.

தற்போது இந்த நாட்டில் பொருளாதார பின்னடைவுக்கு கொரோனா காரணமாக உள் ளது. இதனை நாங்கள் மறுக்க முடியாது. அதனைவிட முக்கி யமாக எமது மக்களின் இனப் பிரச்சினையும் அதனால் ஏற் பட்ட யுத்தம் மற்றும் இழப்புக்க ளும் உள்ளன. எமது பிரச்சி னைக்குத் தீர்வை எட்டாது நாடு நிலைபேறான அபிவிரு த்தியை அடைய முடியாது. எனவே இனப்பிரச்சினைக் கான நியாயமான தீர்வை காணு வதை தான் முக்கியமானதாக கொள்ள வேண்டும்.

ஜனாதிபதியின் உரையில் 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு சமாதானம் மலர்ந்ததாக கூறி யிருந்தார். யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது உண்மை. ஆனால் சமாதானம் மலரவி ல்லை. யுத்தம் ஆரம்பித்தத ற்கான காரணிகள் அதே நிலை யில் தான் உள்ளது. அந்த காரணிகளுக்கு சரியான தீர்வு கொண்டு வராமல் சமாதனம் மலர்ந்ததாக கூற முடியாது.

யுத்தம் மிகப்பெரிய அழிவை எமது பகுதிகளில் ஏற்படுத்தி யுள்ளது. இதனை நிவர்த்தி செய்ய பாரிய அபிவிருத்திகளை எமது பகுதிகளில் செய்ய வேண் டியுள்ளது. இதனை கொழும் பில் இருந்து திட்டமிடுவதனூ டாக அவ் அபிவிருத்தி எமது மக்களுக்கு பெற்றுக் கொடுக்க முடியாது. முக்கியமாக அந்த மக் களின் பங்களிப்புடனும் மக்கள் பிரதிநிதிகளின் ஆலோசனை களுடனும் நிலைமைகளை புரி ந்து செயற்பட வேண்டும் எனவே தான் எங்களு டைய பகுதிக ளில் எமது மக்கள் தங்களின் அலுவல்களை தாங்களே பார்க கக்கூடிய அளவிலான சமஷ்டி முறையிலான நியாயமான தீர்வைக் கோரி நிற்கின்ற னர்.

இந்த அரசு புதிய அரசியல் அமைப்பையும் கொண்டு வரு வதனூடாக எமது பிரச்சினை களை தீர்ப்பதற்கு முயற்சிக்க வேண்டும். ஜனாதிபதியின் உரையில் புதிய அரசியல் அமைப்பு தொடர்பான எவ்வித மான விடயங்களும் உள்ளட ங்கவில்லை. ஆகவே சமஷ்டி முறையிலான நியாயமான தீர்வு ஒன்றை ஏற்படுத்துவ தனூடாகத்தான் நாட்டில் நிர ந்தர அமைதியையும் நிலை பேறான அபிவிருத்தியையும் ஏற்படுத்த முடியும் என அவர் தெரிவித்தார். (நி-104)



யாழ்ப்பாணம் - நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகர பிள்ளையார் ஆலய அலங்கார தோரண வளைவு நுழைவாயில் திறப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. (படம் : சிவசாந்தன்)

# நாட்டின் நிலை கவலைக்கிடமாக உள்ளது

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய நிலை பெரும் கவலையளிப்பதாக முன்னாள் ஜனா திபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமார துங்க தெரிவித்தார். மேலும் தற்போ தைய நிலையை எண்ணி அழுவதா சிரிப்பதா என்பது புரியவில்லை எனவும் அவர் தெரிவித்தார். இது தொடர்பில் தொடர்ந் தும் கருத்துத் தெரிவித்த அவர், மைத்திரி பால சிறிசேனவும், மகிந்த ராஜபக்ஷ வுமே சுதந்திரக் கட்சியின் அழிவிற்கு பொறுப்புக்கூற வேண்டுமெனத் தெரிவித் தார். கடுமையான போர் இடம்பெற்ற கால த்தில் கூட நாட்டின் பொருளாதாரத்தை தாம் கட்டியெழுப்பியதாகவும் சுட்டிக்கா ட்டினார்.

அதேவேளை மொட்டு கட்சியுடன் இணைந்து கொள்ள வேண்டாம் என தாம் கோரியதாகவும் அதனை கட்சியின் தலைவர் மைத்திரி கண்டுகொள்ள வில்லை எனவும் சந்திரிகா தெரி வித்தார். (நி-5)

# நீர் கொள்ளளவு குறைவடைந்தால் ஆறு மணி நேர மின்வெட்டு அமுல்

## மின்பொறியியலாளர் சங்கம் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

நீர் மின் நிலையங்களின் நீர் கொள் ளளவு மேலும் குறையும் பட்சத்தில் ஐந்து முதல் ஆறு மணித்தியாலங்கள் வரை மின்வெட்டை மேற்கொள்ள நேரிடும் என இலங்கை மின் பொறியி யலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மே மாத இறுதிக்குள் நீர் மின் உற்பத்தி போதியளவு அதிகரிக்கப்படா விட்டால், எவ்வளவு காலம் மின்வெட்டு அமுலில் இருக்கும் எனத் தெரிவிக்க முடியாது எனச் சங்கத்தின் தலைவர் சௌமிய குமார தெரிவித்தார்.

தற்போது இலங்கையின் தேவைக்கு ஏற்ப மின்சாரத்தை உற்பத்தி செய்ய போதுமான மின் நிலைய வசதிகள் இல்லை எனவும் அவர் தெரிவித் தார். (நி-5)

# சரத்வீரசேகரவிற்கு கொரோனா தொற்று



(கொழும்பு)

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவுக்கு நேற்று கொவிட் தொற்று உறுதியாகியுள்ளது. (நி-5)


# நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்

**உள்ளூர் அபிவிருத்தி ஆதரவு திட்டத்தின் (LDSP)செயற்திறன் நிதிபரிமாற்றம் - 1ன் ( PT - 1); கீழ் தொழில் வாய்ப்பினைஅடிப்படையாகக் கொண்டகணனி பயிற்சி மற்றும் தையல் பயிற்சிநெறிக்கான விண்ணப்பம் கோரல்.**

பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கான திறன் மேம்பாடு மற்றும் வறுமை ஒழிப்பு செயற்பாட்டின் அடிப்படையில் நடாத்த உத்தேசிக்கப்பட்டுள்ள மேற்படி பயிற்சி நெறிகளுக்கு சபை எல்லையுள் வதியும் பொருத்தமான, ஆர்வமுடைய பயனா ளிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

- விண்ணப்பதாரர்கள் நல்லூர் பிரதேச சபை எல்லையினுள் வசிப்பவராக இருத்தல் கட்டாயமானதாகும்.

  ஒவ்வொருபயிற்சிநெறியும் ஆகக்குறைந்தது 10 நாட்களை உள்ளடக்கிய முழு நேர பயிற்சி நெறியாக நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களுக்கமைய ஒவ்வொரு பயிற்சிநெறியும் தலா இரண்டு வகுதிகளாக மேற்கொள்ளப்படும்.
- பயிற்சிநெறிகள் முற்றிலும் இலவசமாக நடாத்தப்படுவதுடன், மதியஉணவு, சிற்றுண்டி என்பனவும் வழங்கப்படும்.
- அங்கீகரிக்கப்பட்டஅரச நிறுவனமூடாக பயிற்சி நெறிகள் நடாத்தப்படுவதுடன் பயிற்சிகளினை முழுமையாக பூர்த்தி செய்பவர்களுக்கு பயிற்சி நெறிகளின் முடிவில் சான்றிதழ்களும் வழங்கப்படும்.
- பயிற்சிநெறியினைமுழுமையாகவும் திறமையாகவும் பூர்த்தி செய்பவர்களுக்கு எதிர்காலத்தில் சபையினால் திட்டமிடப்படும் சுயதொழில் முயற்சிகளின் போது முன்னுரிமையளிக்கப்படும்.
- பயனாளிகள் தெரிவில் வறுமைக்கோட்டிற்குட்பட்ட மற்றும் வாழ்வாதார மேம்பாட்டினை எதிர்பார்க்கும் வகுதியினருக்குமுன்னுரிமையளிக்கப்படும்
- ஆர்வமுடைய விண்ணப்பதாரர்கள் விண்ணப்பபடிவங்களை 25.01.2022 முதல் சபையின் தலைமை அலுவலகத்தில் (14/5,கருவப்புலம் வீதி,கொக்குவில்) பெற்றுக் கொள்ளமுடியும்.
- பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 07.02.2022ம் திகதிக்குமுன்னர் மீளகையளிக்கப்படல் வேண்டும்.
- பயிற்சிநெறிகள் உத்தேசமாக பெப்ரவரி-மார்ச் மாதகாலப்பகுதியில் நடாத்தப்படும்
- மேலதிகதகவல்களுக்கு 021 - 222 - 2700 என்றதொலைபேசி இலக்கத்தின் ஊடாக தொடர்புகொள்ளமுடியும்.
- பயனாளிகள் தெரிவில் சபையின் முடிவே இறுதியானதாகும்.

[illegible]
தவிசாளர்,
நல்லூர் பிரதேசசபை

2022.01.21.

C-3585


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு 20 . 11 . 1938

உதிர்வு 20 . 01 . 2022



இணுவில் தெற்கு இணுவிலைப் பிறப்பிடமாகவும் திருநகர் கிளிநொச்சி, இணுவில் கிழக்கை வசிப்பிடங்களாகக் கொண்ட கிளிநொச்சி பிரபல சித்த ஆயுர்வேத வைத்தியரும் (விஷகடி), தாமோதர அன் சன்ஸ் மருந்துக்கடை உரிமையாளருமான

அமரர்

## அப்புத்துரை தாமோதரம்பிள்ளை (JP)

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவினால் துயருறும்...

(C-3588)

KMV இராதாகிருஷ்ணன் மருந்துக்கடை
மற்றும் பரிமளம் சித்த ஆயுர்வேத வைத்தியசாலை,
கே.கே.எஸ் வீதி, மாவிட்டபுரம்.

# ஓய்வை அறிவித்தார் சானியா

இந்தியாவின் நட்சத்திர டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா, சர்வதேச தொழில்முறை டென்னிஸ் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறப்போவதாக அறிவித்து ள்ளார். 2022 டென்னிஸ் சீசன் முடிவில் அவர் டென்னிஸ் வாழ்க்கையில் இருந்து விடைபெற உள்ளதாக தெரிவித்தார்.

டென்னிஸ் விளையாட்டின் முன் னணி வீராங்கனையாக வலம்வந்த சானியா மிர்சா, தற்போது நடைபெற்று வரும் அவுஸ்தி ரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில், மகளிர் இரட்டை யர் பிரிவில் முதல் சுற்றுடன் வெளியேறினார்.

முதல் சுற்றில் தோல்வியடைந்த பிறகு தனது ஓய்வுத்திட்டம் பற்றி அறிவித்தார்.

சானியா மிர்சா இதுவரை 6 கிரா ண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார். அவர் மகளிர் இரட்டையர் தரவரிசையின் உச்சநிலையை எட்டியுள்ளார். ஒற்றையர் தரவரிசையில் முதல் 30 இடங்களுக்குள் நுழைந்த முதல் இந்தியர் என்ற பெரு மையை பெற்றவர். சானியாவின் ஓய்வு அறிவிப்பு ரசிகர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (4-6)

# பணிநிலை வெற்றிடம்

கிளிநொச்சி ஜெயந்தி நகரில் இயங்கிவரும் மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்திற்கு கணக்காளர் மற்றும் சமையலாளர் பதவி வெற்றிடமாக உள்ளது. பின்வரும் தகுதிகளையுடையோர் விண்ணப்பிக்க முடியும்.

**கணக்காளர் பதவி**

1. இலங்கை கணக்காளர் சேவையில் கடமையாற்றி ஓய்வுபெற்றவர்கள்.

அல்லது

2. சர்வதேச மற்றும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தகுதிவாய்ந்த தனியார் நிறுவனங்கள் போன்றவைகளில் கணக்காளராக கடமையாற்றியவர்கள்.

❖ சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**சமையலாளர் பதவி**

1. சமையல் தொடர்பான முன்அனுபவம் கொண்டவர்கள் விரும்பத்தக்கது.
2. வயதெல்லை 30 - 60 இற்கு உட்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம்.
3. நல்ல தேக ஆரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும்.
4. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தகுதியுடையோர் தங்கள் சுயவிபரக் கோவையினை 05.02.2022 இற்கு முன்னர் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அனுப்ப வேண்டிய முகவரி:-
தலைவர்,
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்,
ஜெயந்திநகர், கிளிநொச்சி.
தொடர்புகளுக்கு: 077 324 0950, 021 492 3118

(C-3587)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2492

**யதுவர்சன்**

ஜோதிடர்: வலது கையில் இருக்கும் இந்த மச்சத்தால் உங்களுக்கு நல்ல மனைவி அமையும்



வந்தவர்: டேய் அது சூடு வச்ச தழும்பு. அதை வச்சதே மனைவி தான்!

**செரோன்**

பகல்ல வர்ற தூக்கம் நைட்ல வர மாட்டேங்குதே... என்ன வியாதியா இருக்கும்?




இதற்கு பெயர் தான் ஃபோன் நோண்டியா வியாதி மகனே....

**மனோஜ்**

சுப்பர் மார்க்கெற்றில 10 நாட்கள் இருக்கும் போது கெட்டுப் போக மாட்டாராம்




எங்க வீட்ல 2 நாட்கள் வெச்சிருந்தா கெட்டுப் போயிடுவாராம்.

**லதீபா**

நான் எழுப்புவேன்னு நம்பி தூங்கிற்று இருக்கான்...




A.M க்கு பதிலா P.M. வச்சிருக்காய் டா சாம்பு மவனேனு நான் எப்படி சொல்லுவேன்

**மதுமிதா**

செய்தி : ஒமிக்ரோன் ஆல் 100 பேர் தொற்று




இத தினமும் சொல்லி போரடிச்சுப் போச்சு

**விபுஷனா**

ஜோசியக்காரரே! தை பொறந்தா ஒரு இனிப்பான செய்தி வரும்னு சொன்னீங்க... அது உண்மைதான்.. டாக்டர்கிட்ட செக்கப் பண்ணப் போனேன் சுகர் அதிகமா இருக்குன்னு சொன்னாரு...




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரக்கறிகளின் விலைகளில் திடீர் வீழ்ச்சி

(கொழும்பு)

மரக்கறிகளின் விலைகள் பாரிய ளவில் குறைவடைந்துள்ளதாக வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

கடந்த சில நாட்களாக மரக்கறி களின் விலை பாரியளவில் அதிகரித் திருந்த நிலையில்.மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வந்தனர்.

இந்நிலையில், பொது மக்கள் பருப்பு மற்றும் உருளைக்கிழங்கு ஆகியவற்றை அதிகளவாகக் கொள் வனவு செய்த காரணத்தினால் மரக்க றிகளின் விலைகள் சடுதியாக குறை ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மலையக பகுதியில் நிலவிய சீர ற்ற காலநிலை காரணமாக அந்த பிர தேசத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மர க்கறி வகைகளுக்கு பெரும்பாதிப்பு ஏற்ப ட்டமையினால்கடந்த சில மாதமாக மரக் கறிகளின் விலை அதிகரித்திருந் தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# ரயில் முன் பாய்ந்து பெண் மரணம் பண்டாரவளையில் சம்பவம்

(கொழும்பு)

பண்டாரவளைப் பகுதியின் எல்ல தொட்டை என்ற இடத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ரயில் முன் பாய்ந்து பெண் ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இவ்வாறு தற்கொலை செய்து கொண்ட பெண் பொல்கஹவலைப் பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய வரென்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் குறித்த பெண் ணின் சடலம் தற்போது பண்டார வளை அரசினர் மருத்துவமனை யின் பிரேத அறையில் வைக்கப்ப ட்டுள்ளது.இச் சம்பவம் தொடர்பில் பண்டாரவளைப் பொலிஸார் மேல திக விசாரணைகளை மேற்கொண் டுள்ளனர். (நி-5)


## பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ. சங்கம்- பளை கிளை பொதுச்சபைக்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுடைய அங்கத்தவர் பட்டியல் தொடர்பானது

பச்சிலைப்பள்ளி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர் பட்டியலில் இருந்து 31.12.2021 ஆம் திகதியில் உள்ளவாறாக கிளை பொதுச்சபைக்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுடைய அங்கத்தவர் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு 20.01.2022 ஆம் திகதி தொடக்கம் 03.02.2022 ஆம் திகதி வரை சங்கத்தின் கிளை நிலையங்களிலும் தலைமைக் காரியாலயத்திலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இப்பட்டியல்களில் உள்ள பெயர், முகவரியில் வேறுபாடுகள் இருப்பின் அல்லது பெயர் தவறவிடப்பட்டிருப்பின் அல்லது ஆட்சேபனைகள் ஏதுமிருப்பின் சங்கச் செயலாளரிடம் எழுத்து மூலம் 05.02.2022 ஆம் திகதிக்கு முன் தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

செயலாளர்,
பச்சிலைப்பள்ளி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்,
பளை. C-3584



## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 22.12.2021 அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்ப விளக்கு
வேம்படி வல்வெட்டித்துறையினைப்
பிறப்பிடமாகவும் பத்திரகாளி கோவில்
ஒழுங்கை , பருத்தித்துறையினை
வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர் **வடிவேலு நந்தகோபால்**
**(நந்தப்பா)**



அவர்களின் சிவபதப்பேறு குறித்த
அந்தியேட்டி கிரியைகள் நேற்று
20.01.2022 வியாழக்கிழமை காலை
6.30 மணியளவில் கீரிமலை புனிதத் தீர்த்
தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிரியை
21.01.2022 இன்று வெள்ளிக்கிழமை
மதியம் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்
தில் நடைபெறும். இத் தருணம் தங்கள்
குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது
ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும்
அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய
போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்

மலர்வு: 20.11.1940 உதிர்வு: 22.12.2021

'அன்பு இல்லம்'
பத்திரகாளி கோவில் வீதி,
பருத்தித்துறை. (9688)

குடும்பத்தினர்
0775122931
0779361345



## களஞ்சிய முகாமையாளர் பதவி ஆட்சேர்ப்பு

சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் கள் விற்பனை நிலையத்தில் பயிற்சியாளராக பணிபுரிய களஞ்சிய முகாமையாளர் (ஆண்) தேவை. விருப்பமுடையோர் கீழ் காணப்படும் முகவரிக்கு தபாலிலோ அல்லது தொலைபேசி ஊடாகவோ தொடர்பு கொள்ளவும்.

மேற்குறித்த பதவிக்குரிய அடிப்படைக் கல்வித் தகைமையாக க.பொ.த சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் அல்லது தமிழ்மொழி, கணிதம் உட்பட 6 பாடங்களுக்கான சித்தியுடன் 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். அத்துடன் உடுவில் பிரதேச செயலர், தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவுக்குள் வதிவிடத்தில் இருப்போர் விரும்பத்தக்கது.

தலைவர்/ பொதுமுகாமையாளர்,
சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.சங்கம்,
மின்சார நிலைய வீதி,
சுன்னாகம்.
தொ.இல : 021 229 0022 , 021 229 0024,
077 020 4378 , 077 104 2116 C-3583


# இராசிபலன்

21.01.2022
தை 08, வெள்ளிக்கிழமை
திருதியை முற்பகல் 8.32 மணிவரை
மகம் முற்பகல் 9.32 மணிவரை
சுபநேரம் 6.35-8.05 மணிவரை
இராகுகாலம் 11.05-12.35 மணிவரை
சந்திராஷ்டமம்: திருவோணம்
சங்கட கர சதுர்த்தி விரதம்

வளவன்




வருங்கால நலன் கருதி சேமிக்க முற்ப டுவீர்கள், சுய முயற் சியின் மூலம் சுகம் காணும் நாள், புண்ணிய காரியங் களில் ஆர்வம் காட்டுவீர்கள்.




குடும்பத்தில் கல லப் பான சூழ்நிலை உரு வாகும், பணத் தேவை கள் எளிதில் பூர்த்தி யாகும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.




குடும்பத்தில் குதூ கலம் தரும் சம்பவ ங்கள் இடம்பெற லாம், ஆடம்பர பொரு ட்களை வாங்கும் எண்ணம் உரு வாகும், செல்வ நிலை உயரும் நாள், போசன சுகமுண்டு.




கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், தொழி லில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, பயணங்களின் போது விழிப் புணர்வு அவசியம்.




எந்தக்காரியத்தையும் எளிதில் செய்து வெற்றி காணும் நாள், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.




அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட் டுவீர்கள், குடும்ப த்தில் சுமைகளும் பொறுப்புக்களும் கூடலாம், திடீர் பயணங்கள் ஏற்படலாம், கற்பனை மிகுதியான நாள்.




உறவினர்களும் நண் பர்களும் வலிய வந்து உதவுவார்கள், வழிபாட்டு சிந்தனை மேலோங்கும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, ஆரோக்கியமான நாள்.




குடும்பத்தில் சுபநிக ழ்வுகள் நடைபெறுவத ற்கான வாய்ப்புண்டு, தொழில் வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வர லாம், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம்,புதிய பொருட் சேர்க்கை உண்டு.




பொல்லாதவர்கள் உங்களை விட்டு வில கலாம், பொதுநல ஈடுபாடு அதிகரிக் கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.




வரம் தரும் தெய்வங் களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சயன சுகக் குறைவான நாள், போசன சுகமுண்டு.




வீண்பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், மருத்து வச் செலவுகள் குறை ந்து மன நிம்மதியை கொடுக்கும், சாதுரியமாக பேசி சாதனை படைக்கும் நாள்.




அலுவலகப் பணிகள் தாமதமாகும், உங்க ளின் திறமைகள் வெளி ப்படும் நாள், அதிகா ரிகள் அனுகூலமான நடந்து கொள்வர், ஆரோக்கியம் சிறக்கும்.

பகை பயங்கரவாதத்தை விட பயங்கரமானது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - கோவையம்பதி திருவருள்மிகு காளி அம்மன் தேவஸ்தான நூதனதிரிதள இராஜகோபுர ஸஹித புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்ட பக்ஷ மகா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி முதல் 11 மணி வரையுள்ள சுப மூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (4-5)

# பருத்தித்துறை கடற்பரப்பில் ஒன்பது மீனவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறைக் கடலில் தடைசெய்யப்பட்ட மீன்பிடி உப கரணங்களைப் பயன்படுத்தித் தொழிலில் ஈடுபட்ட உடப்பு, சிலாபம், கற்பிட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஒன்பது மீனவர்களை நேற்று முன்தினம் புதன் கிழமை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

நான்கு படகுகளில் வந்து தடை செய்யப்பட்ட மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட 9 மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

இதன்போது தடை செய்யப்பட்ட வலைகள், மற்றும் 200 கிலோவுக்கும் அதிகமான மீன்கள் மற்றும், 4 படகுகளையும் கடற்படை கைப்பற்றியுள்ளது.

இதே வேளை, கைது செய்யப்பட்ட மீனவர்களைக் கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களம் ஊடாக நீதி மன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (4-5-18-60)

## "எங்கள் சினிமா" அறிமுக கலந்துரையாடல்

(குப்பிழான்)

கருடா நிறுவனத்தின் "எங்கள் சினிமா" எனும் திட்டத்தின் அறிமுகக் கலந்துரையாடல் எதிர்வரும் 24 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ். யு.எஸ். ஹோட்டலில் இடம்பெறவுள்ளது.

கருடா தயாரிப்பு நிறுவனத்தின் "எங்கள் சினிமா" எனும் திட்டத்தின் கீழ் திறமையும் ஆர்வமும் உள்ள தமிழ் குறும் படச் செயற்பாட்டாளர்களை ஊக்குவிப்பதற்காக வடகிழக்கிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் குறித்த திட்டம் செயற்படுத்தப்படுகிறது. (4-5-18-33)

## யாழ்.போதனாவிற்கு சுகாதார உதவியாளர்கள் தேவை

**பிரதிப் பணிப்பாளர்**

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா மருத்துவமனைக்கு 50 சுகாதாரத் தொண்டர்களின் சேவை தேவைப்படுகின்றது என யாழ்.போதனா பிரதிப்பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா தெரிவித்தார்.

எனவே க.பொ.த. உயர்தரம் கற்ற 25 வயதிற்கு குறைந்த தன்னார்வலர்கள் இச் சேவைக்கு விண்ணப்பிக்க முடியும்.

யாழ்.போதனா மருத்துவமனையிலிருந்து 5 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

இத் தொண்டர்கள் 03 மாத சேவையினைப் பூர்த்தி செய்த பின் தகுதிகாண் சான்றிதழ் வழங்கப்படும். எனவே சேவையாற்ற விருப்பமுடையவர்கள் யாழ்.போதனா மருத்துமனையின் பிரதிப் பணிப்பாளரிடம் விண்ணப்பங்களை நேரடியாகக் கையளிக்கலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (4-5)


## அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம் பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு சுன்னாகம் கந்த ரோடை கோட்டம் கட்டு ஞான வைரவர் கோவிலின் பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ சா.கோபால சர்மாவின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம் பெறவுள்ளன. இந் நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம்பெறவுள்ளது. (4-5)



இலங்கை இராணுவ மருத்துவப் பிரிவின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம், திருநெல்வேலி கிழக்கு பாற்பண்ணைப் பகுதியிலுள்ள பொதுமக்களுக்கு மூன்றாம் கட்ட பூஸ்டர் தடுப்பூசி ஏற்றும் பணி நேற்று காலை இடம்பெற்றது. (படம்:-சிவசாந்தன்)



பிரித்தானிய அமைச்சரும், பொதுநலவாய நாடுகளின் அபிவிருத்தி ஒத்துழைப்பு அமைச்சருமான அஹ்மத் மோல்டனுக்கும், வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவிற்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் புதன்கிழமை வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது. மேற்படி சந்திப்பில் பிரித்தானிய நிறுவனங்களினால் முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்தி, வாழ்வாதார உதவிகள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. (படம்:-ரவிசாந், சிவசாந்தன்)

## உப தவிசாளர் தெரிவு

(கரணவாய்)

வல்வெட்டித்துறை நகர சபைக்கான புதிய உப தவிசாளராக அ.சதீஷ்வரன் தெரிவு செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் புதன் கிழமை உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் நிரஞ்சன் தலைமையில் வல்வெட்டித்துறை நகரசபை மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் உப தவிசாளராக அ.சதீஷ்வரன் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். (4-5-60)



தேசிய டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு, வடக்கு மாகாணத்தின் முதலாவது டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் நேற்று மானிப்பாய் பொதுச் சந்தையில் முன்னெடுக்கப்பட்டது. (படம்:-கஜிந்தன், சிவசாந்தன்)

# ரோந்து கப்பல் மோதியதில் கடலில் மூழ்கியது படகு

(இராமேஸ்வரம்)

இலங்கை கடற்படையின் ரோந்து கப்பல் மோதியதில் இராமேஸ்வரம் பகுதி மீனவரின் படகு கடலில் மூழ்கியதாகவும், அதிர்ஷ்டவசமாக 7 மீனவர்கள் உயிர் பிழைத்துள்ளதாக மீனவர்கள் தெரிவித்தார்.

இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து 500 இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் நேற்று மீன் பிடிப்பதற்கான அனுமதி சீட்டை மீன்வளத் துறை அதிகாரியிடம் பெற்றுக்கொண்டு கடலுக்கு மீன்பிடிக்க மீனவர்கள் சென்றுள்ளனர்.

இந்த நிலையில் கச்சதீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அப்பகுதிக்கு ரோந்து வந்த இலங்கை ரோந்து கப்பல் மீனவர் ஒருவரின் விசைப்படகில் நேருக்கு நேர் மோதியுள்ளது. இதனால் விசைப்படகில் இருந்த 7 மீனவர்கள் கடலில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த போது அப்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மற்றொரு விசைப்படகில் இருந்தவர்கள் உயிருக்கு போராடிக் கொண்டிருந்த 7 மீனவர்களையும் காப்பாற்றினர்.

மேலும் மத்திய மாநில அரசுகள் உரிய பேச்சுவார்த்தை நடத்தி கடலில் மூழ்கிய விசைப்படகை மீட்டு கொடுப்பதோடு இழப்பீடு வழங்க வேண்டும் என மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-5-33-285)

## சர்வதேச வர்த்தக கண்காட்சி யாழில் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். சர்வதேச வர்த்தக கண்காட்சி 12 ஆவது தடவையாக இன்று 21 ஆம் திகதி ஆரம்பமாகி நாளை மறுதினம் 23 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடைபெறவுள்ளது.

இந்த கண்காட்சிக்கு யாழ்ப்பாணம் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்துடன் இணைந்து எல்ஈசிஎஸ் (LECS) நிகழ்வை ஏற்பாடு செய்துள்ள நிலையில் சர்வதேச வர்த்தக மன்றம், கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகம் ஆகியன இதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளன.

அனைத்து பொதுமக்களையும் கண்காட்சியில் இணைந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளதுடன் மேலும் தகவல் விபரங்களுக்கு www.jitf.lk ஐப் பார்வையிடவும் அல்லது 077 109 3792 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-5-18-33)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

குருவே துணை

வாழ்க வையகம்  வாழ்க வளமுடன்

## மனவளக்கலை யோகப் பயிற்சிகள்

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
அன்பர்களுக்கோர் இனிய செய்தி!

*** *"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" * ***

"என்ற பாரதி இயம்பியமைக்கு அமைய அதனிலும் மேலான உலகப் பெருநிதி அறுபத்தைந்தாம் கலையாகிய "மனவளக்கலையை"
இந்த ஆண்டு முழுவதும் யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில்

❖ முதற்கட்ட 7 நாட்கள் கொண்ட உடற்பயிற்சி காயகல்பம்
❖ அடுத்து வரும் அகத்தாய்வு 1...2...3... பயிற்சிகளுக்கும்

**"அன்னை பார்வதி அறக்கட்டளையை சார்ந்த அன்பர்கள் பெரும் மனம்கொண்டு அனுசரணை வழங்க திருவுளம் கொண்டுள்ளார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை அறிவிப்பதில் பேருவகை கொண்டுள்ளோம்..."**

எனவே பயிற்சியாளர்கள் கட்டணமேதுமின்றி பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

❖ உடல் நலத்திற்கு - எளியமுறை உடற்பயிற்சி
❖ உயிர் வளத்திற்கு- சித்தர்களின் வழிவந்த காயகல்ப பயிற்சி
❖ மனஅமைதிக்கு- தியானப் பயிற்சிகள்
❖ அறிவு வல்லமைக்கு- அகத்தாய்வுப் பயிற்சிகள்
❖ உறவுகள் மேம்பட- தற்சோதனைப் பயிற்சிகள்

**காலம் :** 22.01.2022 சனிக்கிழமை
**நேரம் :** மாலை 5:00 மணி தொடக்கம் இரவு 7:00
**பயிற்சியை வழங்குபவர்:** துணைப்பேராசிரியர் அருள்நிதி த.நந்தகுமார்,
துணைப்பேராசிரியர் ந.ஜெயகிருஷ்ணா மற்றும்
அருள்நிதி க.தவமணிதாசன், அருள்நிதி த.சிவகாமி,
அருள்நிதி க.ஜெயராணி

வருக வருக நலம் பெறுக பெறுக
வாழ்க வையகம்
வாழ்க வளமுடன்

**தொடர்புகளுக்கு: யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவில்,
இல.81, பிறவுண்வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.
தொ.இல.021 222 2772, 077 736 8745, 071 440 3268, 071 424 6309** (C-3582)


# மக்களின் நிலைப்பாட்டை அறிய உடனடியாக தேர்தலை நடத்த வேண்டும்

## அநுரகுமார திஸாநாயக்க

(கொழும்பு)

ராஜபக்ஷர்கள் நாட்டின் தேசிய வளங்களை பிற நாட்டவர்களுக்கு விற்று அரச நிர்வாகத்தை முன்னெடுக்கிறார்கள். தேசிய இறையாண்மை, தேசிய பாதுகாப்பு குறித்து ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதி பொய்யாக்கப்பட்டுள்ளது.

மக்களின் நிலைப்பாட்டை அறிந்துகொள்ள ராஜபக்ஷர்கள் உடனடியாக தேர்தலை நடத்த வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

"திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் தேசிய வளத்தை இந்தியாவிற்கு வழங்கும் ஒப்பந்தத்தை உடன் இரத்து செய்" என்ற தொனிப்பொருளின் கீழ் மக்கள் விடுதலை முன்னணியினர் நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி செயலகத்திலிருந்து, கோட்டை புகையிரத நிலையம் வரை எதிர்ப்புப் பேரணியில் ஈடுபட்டனர்.

இப்போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தேசிய வளப்பாதுகாப்பு, நாட்டின் சுயாதீனத்தன்மை ஆகியவற்றை குறிப்பிட்டுக் கொண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளுக்கு முரணாக செயற்படுகிறது.

நாட்டின் தேசிய வளங்களை முழுமையாக பிற நாட்டவர்களுக்கு வழங்கும் கொள்கையை அரசாங்கம் செயற்படுத்துகிறது.

அரசாங்கத்தின் தவறான பொருளாதார முகாமைத்துவத்தினால் நாடு பாரிய நிதி நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளது. ராஜபக்ஷர்கள் தேசிய வளங்களை விற்று நாளாந்த அரச நிர்வாகத்தை முன்னெடுத்துள்ளனர்.

அரசாங்கம் மீது நாட்டு மக்கள் கொண்டுள்ள நிலைப்பாட்டை அறிந்துகொள்ள வேண்டுமாயின் ராஜபக்ஷர்கள் தேர்தலை நடத்த வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-5)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1983 இந்து<br>நட்சத்திரம்:அவிட்டம் 3<br>கி.பா: சூரி.செவ் 12இல்<br>உயரம்:5'9"<br>தகைமை/ தொழில் A/L வங்கி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரசதொழில்<br>தொ.இ: B/6807 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 2<br>கி.பா:31 ½ சூரி 11 செவ் 10இல்<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்:A/L வியாபாரம்<br>எதிர்பார்ப்பு:விவாகரத்து பெற்றவர். விவாகரத் தானவரும் ஏற்றுக்கொள்ளப்படும்<br>தொ.இ:G/6783 |
| பிறப்பு:1986 இந்து நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: சூரி 5 செவ் 9 இல்<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்:LLB முகாமைத்துவ உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: அரசதொழில்<br>தொ.இ: B/6818 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்:உத்தரட்டாதி 4<br>கி.பா:-சூரி.செவ் 2இல் உயரம்:148 cm<br>தகைமை/தொழில்:A/L மருத்துவமனை தாதி (தனியார்)<br>எதிர்பார்ப்பு:சொந்தத்தொழில்<br>தொ.இ:G/6792 |
| பிறப்பு:1982 இந்து<br>நட்சத்திரம்:பூராடம்<br>கி.பா:-சூரி 12 செவ் 3இல்<br>உயரம்:5'3"<br>தகைமை/தொழில்: A/L சொந்தத்தொழில்<br>எதிர்பார்ப்பு: அரசதொழில் சைவபோசனம்<br>தொ.இ: B/6823 | பிறப்பு:1987 இந்து<br>நட்சத்திரம்:கார்த்திகை 2<br>கி.பா:42 சூரி 3 செவ் 4 இல்<br>உயரம்:167 cm<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு: அரச.தனியார் தொழில். வெளிநாடு விரும்பத்தக்கது.<br>தொ.இ:G/6764 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 2<br>உயரம்:5'6"<br>கி.பா:23 சூரி.செவ் 10இல்<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/6839 | பிறப்பு: 1986 இந்து நட்சத்திரம்: மகம் 3<br>கி.பா:- 62 சூரி 1 செவ் 9இல்<br>தகைமை/தொழில்:HND<br>எதிர்பார்ப்பு:உள்நாடு.வெளிநாடு<br>தொ.இ:G/6797 |

**கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**



# பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமானவர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ளனர்.

- **கணனி தமிழ் ரைப்பிங் மற்றும் பக்க வடிவமைப்பு** (இருபாலாரும்)
  - தகைமை : க.பொ.த உயர்தரம்
  - வயது : 25 இற்கு மேல்
- **அலுவலகச் செய்தியாளர்கள்** (இருபாலாரும்)
  - தகைமை : க.பொ.த உயர்தரம் சித்தி
  - வயது : 25 இற்கு மேல்
- **ஒப்புநோக்குநர்** (இருபாலாரும்)
  - தகைமை : க.பொ.த உயர்தரம் சித்தி
  - வயது : 30 இற்கு மேல்
- **பாதுகாப்பு உத்தியோகத்தர்** (ஆண்)
  - தகைமை : க.பொ.த.சாதாரண தரம்
  - வயது : 40 இற்கு மேல்

தகைமையும் விருப்பமும் உடையவர்கள் தாம் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் 21.01.2022 (வெள்ளிக்கிழமை) இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும்.

(யாழ். நகருக்கு அண்மையில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

இல. 3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

பொது முகாமையாளர்
**- வலம்புரி -**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா முழுமையாக அழியாது

# சூழலோடு இசைவாக்கம் அடைந்து விடும்

## உலக சுகாதார அமைப்பு தெரிவிப்பு

(ஜெனிவா)

**கொரோனா வைரஸை முடிவுக்குக் கொண்டு வருவது சாத்தியமில்லை. இவ்வாறான வைரஸ்கள் ஒருபோதும் முழுமையாக அழிந்துவிடாது. ஆனால் அவை இசைவாக்கம் அடைந்து, வாழ்வில் ஒரு பகுதியாக மாறிவிடும் என உலக சுகாதார அமைப்பு தெரிவித்தது.**

எனினும் இந்த ஆண்டு பொதுச் சுகாதார அவசர நிலையை நாம் முடிவுக்குக் கொண்டு வர முடியும் என உலக சுகாதார அமைப்பு அவசர கால திட்டத்தின் தலைவர் மருத்துவர் மைக் ரியான் தெரிவித்தார்.

உலகப் பொருளாதார மன்றத்தின் 2022 உச்சி மாநாட்டில் பேசிய மைக் ரியான், உலக மக்கள் தொகையில் பெரும்பாலானவர்களுக்கு தடுப்பூசி போடுவதன்மூலம் தொற்று நோயால் ஏற்படும் பாதிப்பை தணிப்பதை நாங்கள் உறுதி செய்ய வேண் டும்.

அதிகளவானவர்களுக்கு தடுப்பூசி போடுவதன் மூலமே பொதுச் சுகாதார அவசரநிலையை முடிவுக்குக் கொண்டு வரமுடியும்.

ஒமிக்ரோனால் உலகமெங்கும் பல நாடுகள் மீண்டும் முடக்கப்பட்டுள்ளதுடன், பயணத் தடைகளும் விதிக்கப்பட்டுள்ளன. இது கொவிட்-19 தொற்று நோயின் நிச்சயமற்ற தன்மையை வலுப்படுத்தியுள்ளது.

இவ்வாறான நிலையிலேயே நாங்கள் இந்தாண்டு வைரஸை முடிவுக்கு கொண்டு வரமாட்டோம். இந்த வைரஸை நாம் ஒருபோதும் முடிவுக்குக்கொண்டு வரமுடியாது. கொரோனா வைரஸ்கள் வாழ்வியலில் ஒரு பகுதியாக மாறிவிடும் என அவர் தெரிவித்தார். (நி-5)

## அமெரிக்காவின் தடைகளை அடுத்து

# அணு ஆயுத சோதனைகளை மீண்டும் தீவிரப்படுத்த வடகொரியா திட்டம்

(பியாங்யாங்)

அமெரிக்காவின் சமீபத்திய தடைகளை அடுத்து தனது அணு ஆயுதம் உள்ளிட்ட ஆயுத சோதனைகளை மேலும் தீவிரமாக முன்னெடுப்பது குறித்து மீண்டும் ஆராய வேண்டியேற்படும் என வட கொரியா எச்சரித்துள்ளது.



அமெரிக்க ஏகாதிபத்தியத்துடனான நீண்டகால மோதலுக்கு நாம் இன்னும் முழுமையாக தயாராக வேண்டும் என அரசாங்க தகவல்களை மேற்கோள்காட்டி வடகொரிய அரச ஊடகம் நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவின் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள பாதுகாப்பை மேலும் பலப்படுத்துவதோடு, தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட அணு ஆயுத சோதனைகள் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளையும் மீண்டும் தொடங்குவது குறித்து வட கொரியா பரிசீலித்து வருவதாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் வோஷிங்டனுடனான இராஜதந்திர ரீதியான பதற்றங்களுக்கு மத்தியில் அடுத்தடுத்து ஏவுகணைச் சோதனைகளை வடகொரியா நடத்தியது.

இவற்றில் அமெரிக்க நிலப்பரப்பைத் தாக்கும் திறன் கொண்ட ஏவுகணைகளும் அடங்கும்.

எவுகணை உள்ளிட்ட ஆயுத சோதனைகள் தங்களது தற்பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கம் கொண்டவை.

வேறு எந்த நாட்டுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் நோக்கம் கொண்டதல்ல என வட கொரியா மீண்டும் மீண்டும் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# தலைநகரை மாற்றும் இந்தோனேசியா



(ஜகார்த்தா)

இந்தோனேசியத் தலைநகர் ஜகார்த்தாவை போர்னியோ தீவுக்கு மாற்றும் மசோதாவுக்கு அந்நாட்டு பாராளுமன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

புதிய தலைநகருக்கு நுசாந்தரா எனப் பெயர் வைக்கவும் இந்தோனேசிய அரசு முடிவு செய்துள்ளது.

தலைநகரை மாற்ற பாராளுமன்றம் அனுமதி அளித்ததைத் தொடர்ந்து புதிய தலைநகரை மேம்படுத்துவதற்கான பணியை இந்தோனேசியா தொடர்ந்து ள்ளது.

தலைநகர் ஜகார்த்தாவில் மக்கள்தொகை தொடர்ந்து அதிகரித்து வருவது இந்தோனேசிய அரசுக்குத் தொடர்ந்து பிரச்சினையாகவே இருந்து வந்தது. மேலும் காலநிலை மாற்றம் காரணமாகப் பல்வேறு இயற்கை பேரிடர்களால் கடும் பாதிப்பை ஜகார்த்தா சந்தித்து வருகிறது.

மக்கள்தொகை அதிகரிப்பால் வாகனப் பெருக்கமும், காற்று மாசும் ஜகார்த்தாவில் அதிகரித்து வருகின்றன.

2019ஆம் ஆண்டே ஜகார்த்தாவிலிருந்து தலைநகரை மாற்றும் முடிவை இந்தோனேசிய அரசு எடுத்து விட்டது.

கொரோனா காரணமாக இந்த முடிவு தள்ளி வைக்கப்பட்டு வந்தது குறிப் பிடத்தக்கது. (நி-5)

# சமூக ஊடகங்களில் வதந்தி பரப்பினால் 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை

## சவுதி அரேபியா அதிரடி

(ரியாத்)

சமூக ஊடகங்களில் ஆதாரமற்ற வதந்திகளை பரப்பினால் 5 ஆண்டு சிறைத் தண்டனையும், பெரும் அபராதமும் விதிக்கப்படும் என்ற அறிவிப்பு சவுதி அரேபியாவில் வெளியாகி உள்ளது.

சமூக ஊடகங்களில் ஆதாரமற்ற வதந்திகளை பரப்புவது என்பது பல்வேறு நாடுகளில் அரங்கேறி வருகிறது.

இது சமூகத்தில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தி வருகிறது.

இந்த நிலையில் சவுதி அரேபியாவில் சமூக ஊடகங்களில் தவறான தகவல்களை ஆதாரம் இன்றி வெளியிடுவதை முடிவுக்கு கொண்டு வர அரசு அதிரடி நடவடிக்கையில் இறங்கியது.

யாரேனும் ஆதாரம் இன்றி சமூக ஊடகங்களில் வதந்தி பரப்பினால் அவர்களுக்கு 5 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும், பெரும் தொகை அபராதமும் விதிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. (நி-5)

## வட்ஸ் அப்பில் அவதூறு பரப்பியவருக்கு தூக்குத் தண்டனை

### பாகிஸ்தான் நீதிமன்றம் தீர்ப்பு

(இஸ்லாமாபாத்)

வட்ஸ்-அப்பில் அவதூறு பரப்பிய பெண்ணுக்கு பாகிஸ்தான் ராவல்பிண்டி நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கியது.

பாகிஸ்தானை சேர்ந்த அனீகா ஆதிக் என்ற பெண் தனது 'வட்ஸ் அப்' ஸ்டேட் டசில் அவதூறு குறுஞ்செய்தியையும் மற்றும் கேலிச்சித்திரத்தையும் வெளியிட்டதாக கடந்த 2020 ஆம் ஆண்டு மே மாதம் கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பாக அனீகா ஆதிக்குக்கு பாகிஸ்தான் ராவல்பிண்டி நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கியது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவிக்கால நீடிப்பினை முறையாக பயன்படுத்துங்கள்

## சாவகச்சேரி நகரசபை தவிசாளர்

(சாவகச்சேரி)

உள்ளூராட்சி சபைகளின் ஒருவருட கால கால நீடிப்பினை முறையாகப் பயன்படுத்த சகலரும் ஒத்துழைக்க வேண்டும் எனச் சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் 2023 மார்ச் 19ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருப்பதாக வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இந்த ஒருவருட கால நீடிப்பினை முறையாகப் பயன்படுத்தி வினைத்திறனான முறையில் நகரை அபிவிருத்தி செய்ய சகலரும் ஒத்துழைக்க வேண்டும்.

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் மின் மயானம் அமைக்கும் முயற்சியில் தென்மராட்சி அபிவிருத்தி ஒன்றியம் (TDA) வர்த்தக சங்கத்துடன் இணைந்து செயற்பட்டு வருகிறது.

அத்துடன் நுணாவில் பகுதியில் சிறுவர் பூங்கா அமைப்பதற்கான நடவடிக்கைகளும் சபையால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எனவே இந்த ஒரு வருட கால நீடிப்பினை வினைத்திறனான முறையில் பயன்படுத்துவோம்என மேலும் அவர் தெரிவித்தார்.(4-5-30)

# பாடசாலை மாணவன் மீது தாக்குதல்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பாடசாலை மாணவன் ஒருவன் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில்,

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் கல்விகற்கும் உயர்தர மாணவன் ஒருவன் பாடசாலை முடிந்து வீடு திரும்பிய நிலையில் வீதியில் வைத்து குறித்த மாணவன் மீது இளைஞர் ஒருவர் மூர்க்கத்தனமான தாக்குதல் நடத்தியுள்ளார்.

தாக்கியதில் காயமடைந்த மாணவன் புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (4-5-281)



டெங்குநோயிலிருந்து எம்மைப் பாதுகாப்போம்.நுளம்பு பெருகும் இடங்களை இல்லாமல் செய்வோம் எனும் தொனிப்பொருளில் நாடளாவிய ரீதியில் இடம்பெற்று வரும் டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம் வவுனியா மாவட்டத்தில் நகரசபையின் ஏற்பாட்டில் பெரியார் குளம் பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றது.

(படம்: வசந்தரூபன், சதீஷ்)

# இரத்ததான நிகழ்வு




(குப்பிழான்)

நல்லூர் றோட்டறிக் கழகம் றோட்டறக்ட் கழகங்களுடன் இணைந்து நடத்தும் மாபெரும் இரத்ததான நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை யாழ். போதனா மருத்துவமனையின் இரத்த வங்கிப் பிரிவில் இடம்பெறும்.

ஆர்வலர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (4-5-18)

# கடலாமையுடன் கைதானவர் பிணையில் விடுவிப்பு



(தருமபுரம்)

கிளிநொச்சி முழங்காவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நொச்சி முனை கடற்கரையில் கடலாமையுடன் ஒருவர் முழங்காவில் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டார்.

குறித்த நபரையும் கடலாமையையும் வனவளத் திணைக்களத்தினரிடம் முழங்காவில் பொலிஸார் ஒப்படைத்ததை அடுத்து சந்தேக நபரை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் முற்படுத்தினர்.

இதன்போது குறித்த நபரை இரண்டு இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் விடுவிக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் வழக்கை எதிர்வரும் 05.05. 2022 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

அத்துடன் ஆமையை மிருக மருத்துவரின் பரிசோதனைக்குட்படுத்திய பின் மருதங் கேணி தாளையடி கடலில் விடுமாறும் உத்தரவிட்டார். (4-5-6-316)



முல்லைத்தீவு குமுழமுனை மகா வித்தியாலயத்திற்கு போட்டோப் பிரதி இயந்திரம் கையளிக்கப்பட்டுள்ளது. பாடசாலையின் நீண்ட காலத் தேவையாகக் காணப்பட்ட நவீன முறையிலான போட்டோப்பிரதி இயந்திரத்தை பழைய மாணவர் சங்க செயலாளர் உட்பட பிரதிநிதிகள் நேற்று முன்தினம் கையளித்தனர்.

(படம்: கிருஷ்ணகுமார்)

# தீயில் எரிந்து சாம்பலாகியது தனியார் மது விடுதி

## வவுனியாவில் சம்பவம்

(குருமன்காடு)

வவுனியா வைரவப் புளியங்குளம் பகுதியில் அமைந்துள்ள தனியார் மது விடுதியில் நேற்று அதிகாலை மூன்று மணி யளவில் திடீரென தீப்பற்றி எரிந்த நிலையில் 4 மணி நேர போராட்டத்தின் பின்னர் தீயணைப்புப் பிரிவினர் கடும் முயற்சி செய்து தீயைக் கட்டுப் படுத்தினர்.

குறித்த தீ விபத்துச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, வவுனியா, வைரவப் புளியங்குளம் பகுதியில் அமைந்துள்ள மதுபான விடுதி ஒன்றில் அதிகாலை 3 மணியளவில் தீப்பிடித்ததை அவதானித்த அயலவர்கள் உடனடியாக நகரசபை தீயணைப்பு பிரிவினருக்கு தகவல் வழங்கினர். அதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்பு பிரிவினர் தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்த போதும் விடுதி முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.



பல இலட்சம் பெறுமதியான பொருட்கள் , மதுபானம் தீயில் எரிந்தன. தீ விபத்திற்[illegible] காரணம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை தடயவியல் பொலிஸாருடன் இணைந்து வவுனியா பொலிஸார் மற்றும் குற்றத்தடுப்பு பிரிவு [illegible]

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 350 | 350 | 330 | 400 |
| உருளைக்கிழங்கு | 160 | 160 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 500 | 700 | 450 | 400 |
| தக்காளி | 180 | 140 | 160 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 70 | 70 | 60 |
| கோவா | 260 | 250 | 230 | 250 |
| கரட் | 340 | 440 | 430 | 450 |
| பூசணி | 120 | 100 | 130 | 180 |
| புடோல் | 280 | 200 | 180 | 240 |
| வாழைக்காய் | 80 | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 280 | 240 | 100-250 | 400 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 200 | 240 |
| பாகற்காய் | 280 | 300 | 300 | 400 |
| வெண்டிக்காய் | 240 | 240 | 150 | 240 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 100 | 120 |
| பயற்றங்காய் | 400 | 350 | 350 | 400 |
| லீக்ஸ் | 320 | 240 | 230 | 250 |
| பீற்றூட் | -- | 300 | -- | 480 |
| கறிமிளகாய் | 350 | 500 | -- | 800 |
| முருங்கைக்காய் | 1000 | 1000 | 1200 | 1000 |
| போஞ்சி | 300 | 350 | 300 | 400 |
| கத்தரிதம்புள்ள | 320 | 300 | -- | 380 |
| கீரை - 1 பிடி | 80 | 60 | 100 | 120 |
| தேசிக்காய் | 120 | 150 | 140 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 50-90 | 70-100 |
| இராசவள்ளி | 200 | 160 | 200 | 220 |
| வெங்காயப்பூ | 300 | 300 | 280 | 350 |
| முள்ளங்கி | 100 | 80 | 120 | 80 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 80 | 60 |
| வல்லாரை | 25 | 250 | 40 | 40 |
| ஈரப்பலா | 100 | 100 | 80 | 150 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தை மாத இராசி பலன்கள்

## 14.01.2022 - 12.02.2022

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

## புதிய தொழில் தொடங்குவது பற்றி சிந்திப்பீர்கள்!



**விவேகத்தோடு செயற்பட்டு வெற்றியை வரவழைக்கும் தனுசு இராசி வாசகர்களே!**

தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் குரு பகவான் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். விரயாதிபதி செவ்வாய், விரய ஸ்தானத்திலேயே சஞ்சரிக்கிறார். எனவே தேவைக்கேற்ற விதத்தில் வரவு வந்து கொண்டேயிருக்கும்.

**சூரியன் - சனி சேர்க்கை**

உங்கள் இராசிக்கு 2 ஆம் இடத்தில் சூரியனும், சனியும் சஞ்சரிக்கிறார்கள். இந்த பகைக் கிரகங்களின் சேர்க்கை நல்லதல்ல. ஒன்று கொடுப்பதை ஒன்று தடுக்கலாம். அரசு வழியில் சில தொல்லைகள், அதிகார பலம் உள்ள வர்களால் சில பிரச்சினைகள் உருவாகும்.

திட்டமிட்ட காரியங்கள் சில நடைபெறாமல் போகலாம். பாகப்பிரிவினை எதிர்பார்த்தபடி நடைபெறாது. கொடுக்கல் - வாங்கல் ஏமாற்றம் அளிக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாது. வளர்ச்சிப் பாதையில் சில குறுக்கீடு வந்து சேரும்.

**புத சுக்கிர யோகம்**

புதனோடு சுக்கிரன் சேர்ந்து பலம் பெற்று நல்ல இடத்தில் சஞ்சரித்தால் 'புத சுக்கிர யோகம்' உருவாகும். இம்மாதம் உங்கள் இராசியிலேயே புதனும், சுக்கிரனும் இணைந்து சஞ்சரிக்கிறார்கள். களத்திர ஸ்தானம் மற்றும் தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியான புதன், 6 மற்றும் 11 இற்கு அதிபதியான சுக்கிரனோடு இணைந்து சஞ்சரிக்கும் பொழுது, மணவிழா, மணிவிழா போன்ற சுபகாரியங்கள் இல்லத்தில் நடைபெறும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. புதிய தொழில் தொடங்குவது பற்றி சிந்திப்பீர்கள். வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைத்து உதிரி வருமானம் வரும்.

**தனுசு செவ்வாய் சஞ்சாரம்**

தை மாதம் 4 ஆம் திகதி, தனுசு இராசிக்கு செவ்வாய் செல்கிறார்.

விரயாதிபதி செவ்வாய் உங்கள் இராசியில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில், விரயங்கள் அதிகரிக்கும். வீடு மாற்றங்களும், உத்தியோக மாற்றங்களும் ஏற்படலாம். புத்திர ஸ்தானாதிபதியாகவும், செவ்வாய் விளங்குவதால் பிள்ளைகள் வழியிலும் விரயம் உண்டு.

எப்படி இருந்தாலும் வரவைக்




காட்டிலும் செலவு அதிகரிக்கும். உடன்பிறப்புகள் உங்களை விட்டு விலக நேரிடலாம்.

**மகர புதன் சஞ்சாரம்**

தை 27 ஆம் திகதி, மகர இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 7, 10 இற்கு அதிபதியானவர் புதன். அவர் தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது தொழில் வளம் சிறப்பாக இருக்கும். போட்டிக் கடை வைத்தவர் விலகுவர். மாமன், மைத்துனர் வழியில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நடைபெறும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். கல்வி, கலை சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் அனுகூலம் கிடைக்கும். வாகன யோகம் உண்டு. வளர்ச்சிப் பாதையில் புதிய திருப்பங்கள் ஏற்படும். அரசு வேலைக்கு முயற்சித்தவர்களுக்கு அது கைகூடும். இம்மாதம் லட்சுமி வழிபாடு இனிமை சேர்க்கும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கணவன் - மனைவிக்குள் அந்நியோன்னிய உறவு ஏற்படும். சுபவிரயங்கள் உண்டு. பகையாக இருந்த உறவினர்கள் நட்பாக மாறுவர்.

பிள்ளைகளுக்கான வேலைவாய்ப்பு பற்றிய மகிழ்ச்சியான தகவல் கிடைக்கும்.

பணிபுரியும் பெண்கள் விருப்ப ஓய்வில் வெளிவந்து தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவர்.

## கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும்!



**பக்கத்தில் இருப்பவர்களை பக்க பலமாக மாற்றும் மகர இராசி வாசகர்களே!**

தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசி நாதன் சனி உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கிறார். ஏழரைச் சனியில் ஜென்மச் சனியின் ஆதிக்கம் நடைபெறுகிறது.

அஷ்டமாதிபதியான சூரியனால் விரயங்கள் அதிகரிக்கும்.

**சூரியன்- சனி சேர்க்கை**

மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசியிலேயே சூரியனும், சனியும் சேர்ந்து சஞ்சரிக்கிறார்கள். இது அவ்வளவு நல்லதல்ல. இராசிநாதனோடு அஷ்டமாதிபதி சேரும் பொழுது மனக் குழப்பம் அதிகரிக்கும். குடும்பத்தில் மருத்துவச் செலவு கூடும். அரசு வழி தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடும்.

குடும்பத்தில் நடக்கவேண்டிய காரியங்கள், பணப்பற்றாக்குறையால் தடை படலாம். விலை உயர்ந்த பொருட்கள் பழுதாகி மனதை வாட்டலாம்.

பணிபுரியுமிடத்தில் உடன் பணிபுரிபவர்களால் பிரச்சினைகள் உருவாகும். நிதானத்தோடு நடந்து கொள்ள வேண்டிய நேரம் இது.

**புத சுக்கிர யோகம்**

உங்கள் இராசிக்கு 5, 10 இற்கு அதிபதியான சுக்கிரனும், 5, 9 இற்கு அதிபதியான புதனும் ஒன்றாக இணைந்து சஞ்சரிப்பதால் 'புத சுக்கிர யோகம்' உருவாகிறது.

இதனால் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். தொழிலை சொந்தக் கட்டடத்திற்கு மாற்றுவது பற்றி சிந்திப்பீர்கள்.

**தனுசு செவ்வாய் சஞ்சாரம்**

தை 4 ஆம் திகதி, தனுசு இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய், விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, ஏதேனும் ஒரு விரயத்தை முன்னிட்டு இடம், பூமியை விற்க நேரிடலாம்.




சொத்தை விற்று வரும் தொகையைக் கொண்டு கடனை அடைகலாமா? அல்லது தொழிலை வளப்படுத்தலாமா? என்று சிந்திப்பீர்கள். தாய்வழி ஆதரவு கிடைக்கும்.

**மகர புதன் சஞ்சாரம்**

தை 27 ஆம் திகதி, மகர இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசியில் புதன் வருவது யோகம் தான். குறிப்பாக 6, 9 இற்கு அதிபதியான புதன் ஜென்ம இராசியில் சஞ்சரிக்கும் பொழுது, உத்தியோகத்தில் முன்னேற்றம் ஏற்படும்.

வாங்கிய கடனைக் கொடுத்து மகிழ்வீர்கள். தந்தை வழி ஆதரவு உண்டு. முன்னோர் சொத்துக்களில் பாகப்பிரிவினை சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். 'பழைய வாகனங்கள் அடிக்கடி பழுதாகி, செலவு வைக்கின்றதே' என்று நினைத்து புதிய வாகனங்கள் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். உடல் நலம் சீராக மாற்று மருத்துவம் கைகொடுக்கும். இம்மாதம் நரசிம்மர் வழிபாடு நன்மை தரும்.

**பெண்களுக்கான பலன்கள்**

வரவைக் காட்டிலும் செலவு கூடும் மாதம் இது. கொடுக்கல்- வாங்கலில் திருப்தி ஏற்படாது. கட்டிய வீட்டைப் பழுது பார்க்கும் முயற்சி கைகூடும். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை நிலவ, விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள்.

படித்து முடித்து வேலை இல்லாத பிள்ளைகளுக்கு இப்பொழுது நல்ல வேலை கிடைக்கலாம். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். பணிபுரியும் பெண்களுக்கு திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்காது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொவிட் தொற்று உறுதியானவர்களுக்கு நீரிழிவு நோய் ஏற்படக்கூடிய சாத்தியம்

(கொழும்பு)

**கொவிட்-19 தொற்று உறுதியானவர்களுக்கு வயதெல்லையின்றி நீரிழிவு நோய் ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் நிலவுவதாக புதிய ஆய்வு மூலம் தெரியவந்துள்ளது என நீரிழிவு சம்மேளனத்தின் தலைவர் விசேட மருத்துவர் மனில்க சுமனதிலக தெரிவித்தார்.**

கொவிட்-19 தொற்று உறுதியானவர்களின் குருதியில் சீனியின் மட்டம் உயர்ந்து காணப்படுவதாக அவர் குறிப்பிடடார்.

இதன் காரணமாக கொவிட் தொற்று உறுதியான அனைவரும் குருதியின் சீனி மட்டத்தைப் பரிசோதித்துக்கொள்ள வேண்டும் என நீரிழிவு சம் மேளனத்தின் தலைவர் விசேட மருத்துவர் மனில்க சுமன திலக அறிவுறுத்தினார். (நி-5)



# 5000 டெங்கு நோயாளர்கள் 20 நாட்களில் பதிவு

(கொழும்பு)

இந்த வருடத்தில் இது வரை சுமார் 5,000 டெங்கு நோயாளர்கள் நாட்டில் பதிவாகியுள்ளனர் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அரசாங்க தகவல்திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் மருத்துவர் இந்திக்க வீரசிங்க இத் தகவலைத் தெரிவித்தார்.

கடந்த வருடம் ஒகஸ்ட் மாதத்திலிருந்து டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதுடன், டிசெம்பர் மாதத்தில் உச்ச நிலையினை அடைந்துள்ளது.

கடந்த ஆண்டு டிசெம்பரில் 9,000 டெங்கு நோயாளர்களும், இந்த வருடத்தில் இதுவரை ஜனவரி மாதத்தில் 5,106 டெங்கு நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நாட்டில் பதிவாகும் டெங்கு நோயாளர்களில் 50% இற்கும் அதிகமானோர் மேல் மாகாணத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதன்படி கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் பதிவாகும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்துள்ளது.

மேல் மாகாணம் தவிர காலி, பதுளை, யாழ்ப்பாணம், குருநாகல், கண்டி, புத்தளம் மற்றும் இரத்தின புரி ஆகிய பகுதிகளிலும் கணிசமான டெங்கு தொற்றாளர்கள் பதிவாகுவதாகவும் அவர் தெரிவித்தார். (நி-5)

# வெளிநாட்டு பிரஜைகளுடனான திருமணம் புதிய விதிமுறைகளுக்கு எதிராக மனுத்தாக்கல்



(கொழும்பு)

வெளிநாட்டு பிரஜைகளுடனான திருமணம் தொடர்பில் இலங்கையர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள புதிய விதி முறையை இரத்து செய்யுமாறு கோரி மேன்முறையீட்டு நீதி மன்றில் ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தரணி திஷ்ய வெரகொடவினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பதிவாளர் ஜெனரல் டபிள்யூ. எம்.எம்.பி. வீரசேகர, பாதுகாப்புச்செயலாளர் கமால் குணரத்ன மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.எச் முனசிங்க ஆகியோர் மனுவின் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

இலங்கை கையொப்பமிட்ட மனித உரிமைகள் தொடர்பான உலகளாவிய பிரகடனத் தில் அங்கீரிக்கப்பட்ட உரிமையாக, ஒவ்வொரு நபரும் தாம் விரும்பும் எந்தவொரு நபரையும் திருமணம் செய்து கொள்ள சுதந்திரம் இருப்பதாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

பதிவாளர் ஜெனரலால் பிறப்பிக்கப்பட்ட இந்த உத்தரவுகள் அரசியலமைப்பிற்கு முரணானவை என மனுதாரர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனவே குறித்த புதிய விதி முறைகளை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என சட்டத்தரணி திஷ்ய வெரகொட இந்த மனுவில் கோரியுள்ளார்.

வெளிநாட்டவர்களை திருமணம் செய்யும் இலங்கையர்களுக்கு கடந்த 1ஆம் திகதி முதல் புதிய சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நமக்கு மேலே ஒருவர்

அச்சாணியற்ற வாகனம்;
கடிவாளமற்ற குதிரை;
கரையற்ற நதி.

ஆகியவற்றின் நிலைமை என்ன ஆகும் என்பதைச் சொல்லித்தான் உணரவேண்டுமென்பதில்லை.

ஆனால் இத்தகைய நிலைக்கு வலியச் சென்று தங்களை ஆளாக்கிக் கொள்பவர்களின் நிலை பரிதாபகரமானது.

அதாவது, இவர்களை யாரும் எதுவும் சொல்லக்கூடாது. இவர்களை எத்தகைய கட்டுப்பாட்டுக்கும் உள்ளாக்கக் கூடாது. கெஞ்சிச் சொன்னாலும் மிஞ்சிச் சொன்னாலும் ஒன்றும் எடுபடாது.

எல்லாம் தன் விருப்பப்படி நடக்க வேண்டும் தான் எண்ணுவதே சரியானது என்பது இவர்களது மனப்போக்கு.

காற்றை அடிப்படையாகக் கொண்டு இசையை எழுப்பும் இசைக் கருவிகளில் காற்றைத் தடை செய்யும் எத்தனையோ சிறு அமைப்புக்கள் இருக்கும். அத்தகைய காற்றுத் தடைகளை முறைப்படி இயக்கும் போது தான் இனிமையான இசை எழுப்புகிறது.

வாழ்விலும் இப்படித்தான். கட்டுப்பாடுகளையும் தடைகளையும் முறைப்படி பயன்படுத்திக் கொள்கிறவர்களின் வாழ்வும் இனிமையாகவே கழிகிறது.

ஆசிரியர் பேச்சைக் கேட்க மாட்டேன், தாய்-தந்தையர் சொல்லைப் பின்பற்ற மாட்டேன், உயர் அதிகாரிகளுக்குக் கட்டுப்படமாட்டேன், நண்பர் பேச்சை நல்லதென்றாலும் ஏற்கமாட்டேன் என்றெல்லாம் பிடிவாதமாய் இருப்பவர்கள் தங்கள் தவறைத் தாமதமாக உணருகிறார்கள்-பல நட்டங்களை ஏற்படுத்திக்கொண்ட பிறகு.

தானாகத் திரிந்து தற்குறியாய் இருப்பவர்களின் முடிவு எந்நாளும் சரியானதாய் இருப்பதில்லை.

ஒன்று உறவு தரும் அன்புக்குக் கட்டுப்பட வேண்டும். அல்லது திறமை மிகுந்தவர்களுக்குக் கட்டுப்பட வேண்டும். அல்லது தகுதியானவர்களுக்காவது கட்டுப்பட வேண்டும்.

அப்படிக் கட்டுப்பட்டு நடப்பதைச் சிலர் கௌரவக் குறைவானது என்று புரிந்து கொண்டுள்ளனர். இது தவறு, தான் தோன்றியாய் இருப்பதே கௌரவக் குறைவான செயல்.

நாமாகத் தேர்ந்தெடுத்துச் செல்லும் வழியானது நம்மிடத்தே ஏற்கனவே மனவிருப்பத்தை உண்டாக்கி விடுகிறது. ஆகவே பெரும்பாலும் இது நல்லவழி என்றே நம் மனதுக்குப் படும். மற்ற வழிகள் நம் கண்ணிலிருந்து மறைபடவும் செய்யும்.

ஆனால் நம்மை வழி நடத்திச் செல்பவர்கள் பெரும்பாலும் அனுபவஸ்தர்களாய் இருக்கக்கூடும். வாழ்க்கைப் பாடங்களைத் தெளிவாக அறிந்தவர்களாய் இருக்கவும் கூடும்.

இந்நிலையில் நல்லது எது, கெட்டது எது, நாம் செல்லும் பாதை சரிதானா, நிதானமாகத் தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோமோ என்றெல்லாம் ஆழம் காண இவர்கள் பெருமளவு உதவக்கூடும்.

நமக்கு மேலே ஒருவர் இல்லாவிட்டாலும் வலியச் சென்று தகுதியுடைய எவர் சொல்லுக்கேனும் கட்டுப்படும் தன்மையை வளர்த்துக்கொள்வது புத்திசாலித்தமான செயலாக இருக்கும். மாறாக இருக்கின்ற தொடர்புச் சங்கிலிகளையும் அறுத்து எறிந்து விட எண்ணுவது புத்திசாலித்தனமாகாது.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## முட்டாள் சீடர்கள்

ஒரு மகா முனிவருக்கு சீடர்கள் பலர் இருந்தனர். முனிவர் பெருமைப்படும் விதத்தில் சீடர்கள் கற்பதில் ஆவலுடனும் கற்றதில் ஞானமுடனும் விளங்கினர்.

ஒருநாள் அவர் தான் கற்றது முழுவதையும் கற்பித்து விட்டதை உணர்ந்தார். இப்போது அவர்கள் முழுமையாக கற்றவர்கள் ஆகி விட்டனர்.


இறந்தவரை உயிர்ப்பித்து எழுப்பும் மிருத்யும்ஜெய எனும் முக்கியமான மந்திரத்தை மட்டும் இன்னும் கற்றுத்தராமல் இருந்தார்.

மிகுந்த பலனளிக்கக் கூடிய மந்திரம் என்றும் அதை கற்றவர் ஞானமில்லாதவராய் இருப்பின் அதனால் ஏற்படக் கூடிய பேராபத்தையும் உணர்ந்திருந்தார்.

ஞானியான முனிவர் நீண்ட நாள் இதைப்பற்றி சிந்தனை செய்தபடி இருந்தார். இதை ரகசியமாக இதுநாள் வைத்திருந்த அவர் கற்றுத்தராமல் இருந்தால் தன்னுடைய காலத்தோடு அம்மந்திரம் பயன்படாமல் போகும் என்பதை உணர்ந்து தனது புத்திசாலியான சீடனை அழைத்து,

**முனிவர்:** சீடனே மிகச் சிறப்பான மந்திரம் ஒன்றைச் சொல்லித்தருவேன். நீ இதை உச்சாடனம் செய்தால் இறந்த மனிதரோ அல்லது பிராணியோ உயிர் பெற்று எழும்.

இதை தேவையான நேரத்தில் உச்சாடனம் செய்ய வேண்டும். ஒரு போதும் தவறாகவோ சோதிக்கவோ செய்து இதன் பலனை வீணடிக்காதே. மறுநாள் காலை தனது எல்லா சீடர்களையும் அழைத்துச் சொன்னார்.



**முனிவர்:** காட்டிற்குள் ஒரு நாற்பது நாட்களுக்கு உங்கள் எல்லோரையும் அனுப்பி வைக்கின்றேன். நீங்கள் ஒன்றாக சென்று ஒன்றாகவே திரும்ப வேண்டும். நீங்கள் ஒருவருக் கொருவர் உதவியாக வழிகாட்டியாக இருந்து நல்லதையே செய்யுங்கள்.

**சீடர்கள்:** ஆகட்டும் குருவே...

சீடர்கள் அனைவரும் ஒன்றாக காட்டிற்குள் சென்றார்கள். ஒற்றுமையாக இருந்தனர். அந்த புத்திசாலியான சீடன் மற்றவர்களை காட்டிலும் தான் ஞானமுள்ளவன் என்பதை உணர்த்த விரும்பினான். அவர்கள் மேலும் காட்டிற்குள் சிறிது தூரம் நடந்ததும் ஒரு இறந்து போன புலியின் சடலத்தைக் கண்டார்கள். பயங்கரமான பெரிய உருவம் கொண்ட புலி அது இறந்து கிடந்தது.

**சீடன் 1:** நான் இப்போது ஆசிரியர் எனக்கு மட்டும் சொல்லித் தந்த உயிர்ப்பிக்கும் மகா மந்திரத்தை சொல்லி எப்படி இறந்தவர்களை உயிரோடு எழுப்புவது என்பதை உங்களுக்குக் காட்டுவேன். இந்த புலியினை உயிரோடு எழுப்பிக் காட்டி நிரூபணம் செய்வேன்.

**சீடன் 2:** உங்களை நிரூபிப்பதற்காக இந்த செயலை செய்யாதீர்கள். மேலும் புலி உயிரோடு எழுந்தால் நிச்சயம் நாம் அனைவரும் கொல்லப்படுவோம். இது சரி அல்ல இது முறையும் அல்ல.

(தொடரும்)

# மகாபாரதம்




நீர் உணவு கொள்ளாமல் உபவாசம் இருப்பதும், தரையில் படுப்பதும் எங்களுக்குத் தெரியாமல் போயிற்று.

நீர் மகிழ்வுடன் இருப்பது போல பாவனை செய்து மனதிற்குள் வேதனையாய் இருந்துள்ளீர்கள்.

நீங்கள்படும்வேதனை கண்டு, எனக்கு என்ன செய்வது எனத் தெரியவில்லை. துரியோதனனிடம் எனக்கு கோபம் இல்லை. எல்லாம் விதியின் செயல்.

நாங்கள் தங்களையும் பாண்டுவையும் வேறாகப் பார்க்கவில்லை. அதுபோல காந்தாரியையும் எங்கள் தாய் போலவே கருதுகிறோம்.

ஆகவே எங்களை விட்டு காடு செல்ல நீங்கள் விரும்பினால் நானும் உங்களுடன் வருவேன் யாரேனும் நாட்டை ஆளட்டும்" என்றார்.

தருமரின் உரையைக் கேட்ட திருதராட்டினன் மூர்ச்சித்து காந்தாரியின் மடியில் சாய்ந்தான்.

தருமர் உடன் குளிர்ந்த நீர் தெளித்துக் கைகளால் வருடினார். தருமரின் கைபட்டதும் திருதராட்டினன் உணர்வு பெற்றான்.

அப்போது அங்கு தோன்றிய வியாசர் தருமருக்கு அறிவுரை வழங்கினார். "தருமா உன் தந்தையின் விருப்பப்படியே செய்.

புத்திரர்களை இழந்த சோகத்தாலும், முதுமையின் தளர்ச்சியாலும் திருதராட்டினன் மிகவும் துன்புறுகிறான். எல்லா ராஜரிஷிகளும் கடைசிக் காலத்தில் வனவாசத்தையே விரும்புகிறார்கள். அவனுக்கும் அந்த எண்ணம் ஏற்பட்டு விட்டது.

தடுக்காதே! ராஜரிஷிகள் யுத்தத்தில் இறக்க வேண்டும் அல்லது கானகம் சென்று தவம் இயற்றிப் பரகதி அடைய வேண்டும். இது உலக நியதி.

எனவே இவனுக்கு அனுமதி கொடு. தவம் புரிய தக்க சமயம்தான் இது" என்ற வியாசரின் அறிவுரையைத்தருமரால் தட்ட இயலவில்லை.

பின்னர் திருதராட்டினன் மக்களை நோக்கிப் பேசினான்" என்

அன்பு மக்களே.. முன்னர் சந்தனு மாமன்னன் இந்நாட்டை சிறப்பாக ஆண்டான். பின் என் தந்தை விசித்திர வீரியனும் பிதாமகர் பீஷ்மரால் காப்பாற்றப்பட்டு நல்ல முறையில் ஆட்சி காத்தார்.

பின்பாண்டுவின் ஆட்சியும் மாட்சியுடன் திகழ்ந்தது. துரியோதனன் பாண்டவர்களுக்குத் தான் தீங்கு இழைத்தானே தவிர உங்களுக்கு ஒரு தீமையும் செய்யவில்லை"

இந்த நேரத்தில் உங்களிடம் ஒன்று வேண்டுகிறேன். நான் உங்களுக்கு ஏதேனும் தீங்கிழைத்திருந்தால் தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள்.

நான் காட்டிற்குச் செல்வதால் வருந்த வேண்டாம். தருமன் எப்போதும் உங்களுக்கு நன்மையே செய்வான். தருமன் தருமத்தின் உருவம் என்பதனை நன்கு புரிந்து கொள்ளுங்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ செய்யும் பாவமே உன்னைக் காட்டிக் கொடுத்துவிடும்.

– பைபிள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சம்பந்தரின் நேர்மையீனம் வெளிப்பட்ட இடம் காண்மினே!

நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ இந்தியா வில் இருந்தபோது; நாங்கள் இந்தியா சென்று பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்திருந் தால், அது பிரதமர் மோடிக்குத் தர்மசங்க டத்தை ஏற்படுத்தியிருக்கும்.

அதனாலேயே இந்தியாவுக்குச் சென்று பிரதமர் மோடியைச் சந்திப்பதை நாங்கள் ஒத்திவைத்தோம்.

இப்போது இந்தியப் பிரதமர் மோடியைச் சந்திப்பதற்கு நாம் காத்திருக்கின்றோமென கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் கூறி யுள்ளார்.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரின் இக்கருத்து தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற நோக்கம் கொண்டதா? அல்லது முதுமை காரணமாக ஏற்பட்ட மாறாட்டமா? என்பது அவருடன் இருப்பவர்களுக்கே வெளிச்சம்.

எதுவாயினும் பசில் ராஜபக்ஷ இந்தியா வில் இருக்கும்போது நாங்களும் இந்தியா சென்று பிரதமர் மோடியைச் சந்தித்தால், அது பிரதமர் மோடிக்குத் தர்மசங்கடத்தை ஏற் படுத்துமென இரா.சம்பந்தர் கூறியதன் மூலம் அவர் தன்னை ஒரு நேர்மையற்ற தலைவ ராக வெளிப்படுத்தியுள்ளார் என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

உண்மையில் நிதியமைச்சர் பசில் ராஜ பக்ஷ இந்தியாவில் இருக்கும்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்தித்தால், அது தனக்குத் தர்மசங்கடமாக இருக்கும் என்று நினைக்க வேண்டியவர் பிரதமர் மோடி.

ஆனால் அவர் அதுபற்றி இம்மியும் அலட் டிக் கொள்ளவில்லை.

மாறாக, தன்னைச் சந்திப்பதற்காக இந் தியா வருமாறு சம்பந்தருக்கு பிரதமர் மோடியே அழைப்பு விடுத்திருந்தார்.

ஆனால் அந்த அழைப்பை கூட்டமைப்பின் தலைவர் உதாசீனம் செய்து விட்டார். அதற் கான காரணம் என்ன என்பது புரியவில்லை.

ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்தவரை பசில் ராஜபக்ஷவின் இந்திய விஜயத்தை சுமுகமாக்கி இலங்கை அரசாங்கத்துக்கு உதவும் பொருட்டே இரா.சம்பந்தர் இந்தியா செல்லாமல் தவிர்த்தார் என்று கருதுகின்ற னர்.

அதேநேரம் பிரதமர் மோடியைச் சந்திக் கின்ற வாய்ப்பை ஏன் தவறவிட்டீர்கள் என்ற கேள்விக்கு எனது கடவுச்சீட்டு காலாவதியாகி விட்டது. அதனால் இந்தியாவுக்குச் செல்ல முடியவில்லை எனக் காரணம் சொன்னவர் இரா.சம்பந்தர்.

அதாவது, தமிழ் மக்களின் தலைவராக இருக்கக்கூடிய ஒருவருக்கு தனது கடவுச் சீட்டு காலாவதியானது கூடத்தெரியவில்லை.

அதற்கும் மேலாக, மிக நீண்ட அரசியல் செல்வாக்குடைய அவரால் உடனடியாகக் கடவுச்சீட்டைப் பெறவும் முடியவில்லை என்ப தான விமர்சனங்கள் எழுந்தன.

இந்நிலையில், பிரதமர் மோடிக்குத் தர்ம சங்கடம் ஏற்படாமல் இருக்கவே சந்திப்பை ஒத்திவைத்தோம் என்று இரா.சம்பந்தர் கூறு வாராயின் இந்த ஜென்மத்தில் தமிழ் இனத் துக்குத் தீர்வு கிடைக்கவாய்ப்பே இல்லை என லாம்.

ஆக, இனி பிரதமர் மோடியைக் கூட்டமைப் பினர் சந்திப்பது உடனடிச் சாத்தியமாகாதென் பதுதான் நம் எதிர்வுகூறல்.

## ரஞ்சன் ராமநாயக்கவிற்கு பொதுமன்னிப்பு வழங்குக

### ஜனாதிபதியிடம் சஜித் மீண்டும் கோரிக்கை

சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன் னாள் பாராளுமன்ற உறு ப்பினர் ரஞ்சன் ராமநாய க்கவிற்கு பொதுமன்னி ப்பு வழங்குமாறு ஜனாதி பதி கோட்டாபய ராஜபக் சவிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாச மீண்டும் கோரி க்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதியைத் தொலைபேசி வழியாக நேற்று முன்தினம் தொட ர்பு கொண்ட சஜித், மனித நேயத்தின் அடிப்படை யில் இந்த முடிவை எடுக் குமாறும் கோரியுள்ளார் எனத் தெரியவருகி ன்றது.

இந்தக் கலந்துரையா டலின் பின்னர் வெலிக் கடைச் சிறைச்சாலை க்குச் சென்ற சஜித், ரஞ் சன் ராமநாயக்கவை சந்தித்து சுகநலம் விசாரி த்துள்ளார். ஜனாதிபதி யிடம் இருந்து சாதக மான பதில் கிட்டும் என வும் நம்பிக்கை வெளியி ட்டுள்ளார்.

அதுமட்டுமல்ல ரஞ்ச னின் விடுதலைக்காக சர்வதேசம் செல்லக் கூட தயாராகவே இருக்கின் றோம் எனவும் சஜித் அறிவித்துள்ளார்.

அதேவேளை, எதிர் வரும் சுதந்திர தினத்தில் ரஞ்சன் விடுவிக்கப்பட லாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம)

## புலமைப்பரிசில் பரீட்சை தோற்றாளர்களுக்கும் பரீட்சை நிலையங்கள்

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்ற வுள்ள கொரோனா தொற் றுறுதியான பரீட்சார்த்திக ளுக்காக பிரத்தியேக மாக 108 பரீட்சை நிலை யங்கள் அமைக்கப்பட்டு ள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித் துள்ளது.

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை நாளை நடைபெறவுள்ளது.

இம்முறை நாடளா விய ரீதியில் 3 இலட்சத்து 40 ஆயிரத்து 508 பேர் இப்பரீட்சைக்கு தோற்ற வுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் தெரிவித் துள்ளது. (ம)

## வவுனியாவில் இரு வேறு இடங்களில் ஆயுதங்கள் மீட்பு

(வவுனியா)

வவுனியாவில் இரு வேறு இடங்களில் இரு ந்து மோட்டார் குண்டு கள் மற்றும் துப்பாக்கி என்பன நேற்று மீட்கப் பட்டுள்ளன.

வவுனியா ஓமந்தை, நாவற்குளம் காட்டுப் பகு தியில் இருந்து உள்ளூர் தயாரிப்பான இடியன் ரக துப்பாக்கி ஓமந்தை பொலி ஸாரால் மீட்கப்பட்டுள் ளது.

இதேவேளை வவு னியா ஈச்சங்குளம், தவசி யாகுளத்தில் இருந்து 60 மில்லிமீற்றர் செல் மற் றும் கொத்துக்குண்டு ஒன்றும் ஈச்சங்குளம் பொலிஸாரால் மீட்கப்ப ட்டுள்ளது.

இது தொடர்பான மேல திக விசாரணையினை ஓமந்தை மற்றும் ஈச்சங் குளம் பொலிஸார் மேற் கொண்டு வருகின்ற னர். (ம-299)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### நெருடலை உணருங்கள்

ஸ்ரீஸ்ரீ: குறிப்பிட்ட செயலால் வருவது குற்ற உணர்வு. ஒரு குறிப்பிட்ட முடிவு அல்லது விளை வால் வருவது நெருடல். செய்த செயலால் குற்ற உணர்வு கொள்ளலாம். அச்செயலால் ஏற்பட்ட விளைவை குற்றமெனக் கொள்ளலாகாது. நடந்தது எதுவாக இருப்பினும் அது உங்களால் ஏற்பட்டதாக இருந்தா லும் சரி, அல்லது வேறொருவரால் ஏற்பட்டதாக இருந்தாலும் சரி அது உங்களுக்குள் ஒரு நெருடலை ஏற்படுத்தவே செய்யும்.

எப்படி குற்ற உணர்வினின்று விடுபடுவது என்று ஒருவர் கேட்க வேறொருவர் வேடிக்கையாகச் சொன்னார், தலையின் மீது ஏழு சுத்துங்கள் என்று. (கேட்ட எல்லோரும் சிரித்தனர்.) (தொடரும்)

## வவுனியா குடாகச்சக்கொடியில் யானையின் சடலம் மீட்பு

(வவுனியா)

வவுனியா குடாகச் சக்கொடி பகுதியில் உயி ரிழந்த நிலையில் 30 வயதான யானையின் சடலம் ஒன்று நேற்று மீட்கப்பட்டது.

குறித்த கிராமத்தில் உள்ள காட்டுப்பகுதியில் யானையின் சடலம் ஒன் றினை அவதானித்த பொதுமக்கள் அது தொடர் பாக பொலிஸாருக்கு தக வல் தெரிவித்திருந்தனர்.

சம்பவ இடத்திற்கு சென்ற வவுனியா பொலி ஸார் வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு தக வல் தெரிவித்திருந்தது டன், யானை இறந்த மைக்கான காரணம் தொடர்பாக விசாரணை களை முன்னெடுத்தனர்.

சுமார் 30 வயது டைய 9 அடி உயரமான யானையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டு ள்ளது. (ம-299)

## சாணக்கியனுக்கு கோவிட்

தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இராச மாணிக்கம் சாணக்கிய னுக்கு கோவிட்-19 தொற் றுறுதியாகியுள்ளது.

தனது ட்விட்டர் பதி வில் அவர் இதனை உறு திப்படுத்தியுள்ளார்.

இந்த நிலையில், தம்மை தனிமைப்படுத்தி க்கொள்ள நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் குறி ப்பிட்டுள்ளார்.

அதேநேரம், கடந்த சில நாட்களாக தம்மு டன் தொடர்பைப் பேணி யவர்கள், ஏதேனும் அறிகுறிகள் தென்பட் டால், பரிசோதனை மேற் கொள்ளுமாறும் பாராளு மன்ற உறுப்பினர் இராச மாணிக்கம் சாணக்கி யன் கோரியுள்ளார். (ம)

## நல்லூர் ரோட்டரியின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ரோட்டரி கழகத்தின் ஏற்பாட்டில் நாளை 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் 4 மணிவரை இரத்ததான முகாம் இடம்பெறவுள் ளது. இந்த இரத்ததான நிகழ்வு யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் நடைபெறவு ள்ளது.

Survivor எனும் இந்த இரத்ததான நிகழ்வில் கொழும்பு பான் றொட் டரக் கழகம், நல்லூர் றோட்டறிக் கழகம், யாழ் ப்பாணம் பெனிசுல்லா, சுழிபுரம், நல்லூர் கெரி ற்றேஜ் றொட்டரக் கழக ங்களும் கலந்து கொள் ளவுள்ளன.

குருதிக்கொடை இறை வனால் வழங்கப்பட்ட உன்னத கொடை. எமது உடலில் சுற்றியோடும் குருதி உயிர்களை காக் கும் வலிமை கொண் டது. இதனால்தான் எமது உடலில் மீண்டும் மீண்டும் உற்பத்தியாகக் கூடிய பாய்பொருளாக இறைவன் குருதியை படைத்திருக்கின்றார். ஆபத்தான நிலையில் இருக்கும் நோயாளர் களுக்கு குருதியைக் கொடுத்து அவர்களின் உயிர்களைக் காக்கும் புனிதமான பணியை ஆற்றுமாறு எங்கள் எல் லோருக்கும் சந்தர்ப்ப த்தை இறைவன் வழ ங்கியிருக்கின்றார்.

ஆகவே இந்தப் பணியை ஆற்றுவதற் காக அனைவரும் ஒன்று படுமாறு நல்லூர் ரோட்டரி கழகத்தின் தலைவர் த.கபிலன் அறிவித்துள் ளார். (ம)

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

சிவபெருமானுடைய சக்திகள் நான்கு. அருள் சக்தி, போர் சக்தி, கோப சக்தி, புருஷ சக்தி.

அருள்சக்தி- பார்வதி

போர்சக்தி- காளி

கோப சக்தி- துர்க்கை

புருஷசக்தி- விஷ்ணு

“அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாற னார்க்கே” என்பது அப்பர் வாக்கு.

முக்கண்ணன்- முக்கண்ணி

சங்கரன்- சங்கரி

திரிபுரசுந்தரன்- திரிபுரசுந்தரி

என்பதுபோல் அரசன்- அரி என வந்தது. ஆகவே திருமாலின் வழிபாடும் அம்பிகையின் வழிபாடும் ஒன்றென உணர்க. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி II

58

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



**இனிக் காளமேகப் புலவர் பாடிய ஒரு பாடலைப் பார்ப்போம்.**

**பூநக்கி ஆறுகால், புள்ளினத்துக்கு ஒன்பதுகால்,**
**ஆனைக்கு கால் பதினேழ் ஆனதே. மானே கேள்!**
**முண்டகத்தின் மீது முழுநீலம் பூத்ததுண்டு,**
**கண்டதுண்டு, கேட்டதில்லை காண்!**

இப்பாடலுக்கான விளக்கம்: பூநக்கி ஆறுகால்: பூ-நக்கி – பூவினை நக்கும் வண்டு. வண்டிற்கு ஆறு கால்கள் உண்டு புள்ளினத்துக்கு ஒன்பதுகால்: புள்ளினம் – பறவை. ஒன்பது கால் (9 X 1/4 = 2 1/4 -இரண்டேகால்) பறவைக்கு இரண்டு கால். ஆனைக்கு கால் பதினேழ் ஆனதே: ஆனை – யானை, கால் பதினேழ் (1/4 X 17 = 4 1/4 – நாலேகால்) யானைக்கு நாலு கால்.

இந்த வகையில் அண்மைக் காலத்துக் கவிஞர் கண்ணதாசனின் பாடல் ஒன்றை நோக்குவோம்.

சரவணப் பொய்கையில் நீராடி என்கின்ற பாடலில்

**அவனிடம் சொன்னேன் என் அஞ்சுதலை**
**அந்த அண்ணலே தந்து வைத்தான் ஆறுதலை**

அஞ்சுதலை என்பது ஐந்து தலைகளைக் குறிக்கவில்லை. மாறாக அஞ்சுதல் அதாவது பயத்தினைக் குறிக்கின்றது. ஆறுதலை என்பது ஆறு தலைகள் என்கின்ற கருத்தில் அல்லாமல் ஆறுதல் என்பதைக் குறிக்கின்றது.

(நன்றி: Valasu,- தாய்வீடு - மார்ச் 2018)

### தமிழர் அளவைகள்

பண்டைத் தமிழர் தரை வாணிகத்திலும் கடல் வாணிகத்திலும் சிறுப்புற்று விளங்கினர். பண்டமாற்று முறை தான் வாணிகத்தின் அடிப்படைக் கூறாக விளங்கியது. பொருள் விற்பதற்கும், வாங்குவதற்குமாகப் பல்வேறு அளவைப் பொருட்களை பயன்படுத்தியிருந்தமை தொல்காப்பியத்தில் காண முடிகிறது.

அளவுக்கும் நிறைக்கும் வழக்கத்திலிருந்த சொற்களைத் தொல்காப்பியம் சுட்டிக்காட்டுகிறது. பண்டைய காலத்தில் பலவேறு அளவை முறைகள் வழக்கில் இருந்ததையும் காண முடிகிறது. நிறுத்தளத்தல், நீட்டியளத்தல், நெறித்தளத்தல், தேங்கமுகந்தளத்தல், சார்த்தியளத்தல், எண்ணியளத்தல் என அளவை முறைகள் இருந்ததாக அறியப்படுகிறது. தமிழ் இலக்கியத்திலுமே எண்களுக்கு அசையாத முக்கியத்துவம் உள்ளது. எட்டுத்தொகை, பத்துப் பாட்டு என்று எல்லாம் எண் கணக்குத்தான். புறநானூறு, அகநானூறு, இன்னாநாற்பது, இனியவை நாற்பது, நான்மணிக்கடிகை, களவழி நாற்பது, நாலடியார் என்று நான்கில் தொடங்கும் பல நூல்களுமுள்ளன.

பண்டைய தமிழ் இலக்கியங்களிலும் இலக்கணங்களிலும் கூறப்பட்டுள்ள எண்ணுப்பெயர்கள், அளவுப் பெயர்கள், நிறைப்பெயர்கள் குறிப்பிடத்தக்கன. குறிப்பாக நீட்டல் அளவையில் மிகச் சிறிய அளவாக அணு குறிப்பிடப்படுகின்றது.

எட்டு அணு கொண்டது ஒரு தேர்த்துகள், எட்டுத் தேர்த்துகள் கொண்டது ஒரு எள்ளு என்று அது நீண்டு செல்கிறது. இவை எல்லாவற்றையும் ஆய்வு செய்து சில நூல்கள் தமிழ் நாட்டில் வெளிவந்திருகின்றன. தமிழர் அளவைகளைத் தொல்காப்பியர் காலம் தொட்டு இன்றுவரை நோக்க, காலம் காலமாக அவை வளர்ச்சி பெற்ற, மாற்றமடைந்த, மரபாகத் தொடர்கின்ற நிலையை நாம் காண இயல்கிறது.

பண்டைய காலத்தில் எண்ணல் அளவையாக விரல்கள் அமைந்திருக்க, நீட்டல் அளவையாகக் கை, கால்களைப் பயன்படுத்தி இருக்கின்றனர். கையால் அள்ளிக் கொடுத்து முகத்தலுக்கும் கையால் எடைபோடு நிறுத்தலுக்கும் கைகளையே பயன்படுத்தியிருக்கின்றனர்.

எனவே முதலில் மனிதன் தன்னுடைய உடல் உறுப்புக்களையே அளக்கப் பயன்படுத்தியிருக்கிறான் என்பது தெளிவாகின்றது. அதன்பின் உண்ணுகின்ற அரிசி போன்ற தானியங்கள், பிற பயன்பாட்டிற்கான பானை போன்ற பாத்திரங்கள் என்பவற்றையும் அளவு கருவிகளாக பயன்படுத்தியிருக்கிறான். தாங்கள் பயன்படுத்தும் அளவைகளில் துல்லியத் தன்மையில்லை என்ற உணர்வு, எளிமை, திருப்தியின்மை போன்றவை காலந்தோறும் வேறு வேறு புதிய புதிய அளவைகளைக் கண்டுபிடிக்கும் மன நிலையை மனிதருக்கு அளிக்கின்றது.

**பண்டைய காலத்தில் எண்ணல் அளவையாக விரல்கள் அமைந்திருக்க, நீட்டல் அளவையாகக் கை, கால்களைப் பயன்படுத்தி இருக்கின்றனர். கையால் அள்ளிக் கொடுத்து முகத்தலுக்கும் கையால் எடைபோடு நிறுத்தலுக்கும் கைகளையே பயன்படுத்தியிருக்கின்றனர். எனவே முதலில் மனிதன் தன்னுடைய உடல் உறுப்புக்களையே அளக்கப் பயன்படுத்தியிருக்கிறான் என்பது தெளிவாகிறது.**

### தொல்காப்பியம் சுட்டும் அளவைப் பெயர்கள்

(விக்கிப்பீடியாவிலிருந்து தொகுக்கப்பட்டது).

சொல்லோடு சொல்புணரும் போது அளவைப் பெயர்கள் எவ்வாறு புணரும் என்பதை விளக்கும்போது தொல்காப்பியம் அளவைப் பெயர்களை (1) அளவுப்பெயர், (2) நிறைப்பெயர், (3) எண்ணுப்பெயர் என மூன்றாகப் பகுத்துக்கொள்கிறது. அளவு என்பதில் நீட்டலளவும், பருமனளவும் அடங்கும். நீள,அகல,உயரங்களை அளப்பது நீட்டல் அளவு. முகந்து அல்லது பெய்துநிறை கட்டியும், நிறுத்துக் கட்டியும் அளப்பது நிறையளவு. முழுமையான பொருட்களை எண்ணுவதும், முழுமைப் பொருளின் சிதைவைப் பகுத்து எண்ணுவதும் எண்-அளவு ஆகும்.

### தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படும் அளவைப் பெயர்கள்

தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படும் அளவைப் பெயர்கள் கலம், பனை, கா, பதக்கு, தூணி, நாழி, உரி, நாடுரி என்பவையாகும். உதாரணமாக "பனை என் அளவும் கா என் நிறையும் நினையும் காலை இன்னொடு சிவனும்" என்ற தொல்காப்பிய வரியில் பனை மற்றும் கா என்னும் அளவுப் பெயர்கள் வருகின்றன.

**தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படும் அளவைப் பெயர்கள் கலம், பனை, கா, பதக்கு, தூணி, நாழி, உரி, நாடுரி என்பவையாகும். உதாரணமாக "பனை என் அளவும் கா என் நிறையும் நினையும் காலை இன்னொடு சிவனும்" என்ற தொல்காப்பிய வரியில் பனை மற்றும் கா என்னும் அளவுப் பெயர்கள் வருகின்றன.**

### தொல்காப்பியம் சுட்டிக் காட்டும் அளவைப் பெயர்கள்

"அளவிற்கும் நிறைக்கும் மொழி முதலாகி உள எனப்பட்ட ஒன்பதிற்று எழுத்தே அவைதாம் கசதபஎன்றாநமவஎன்றாஅகரஉகரமோடவையெனமொழிப" (தொகை-28).

அதாவது அளவை, நிறை ஆகியவற்றைக் குறிக்கும் சொற்கள் ஒன்பது எழுத்துக்களை முதல் எழுத்தாகக்கொண்டு வரும் என்பது தொல்காப்பிய வரையறை. அவை க,ச, த, ப, ந, ம, வ, அ, உ என்பனவாகும்.

இந்நூற்பாவுக்கு உரை எழுதிய இளம்பூரணர் எடுத்துக்காட்டும் பெயர்களாவன - கலம், சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டி, அகல், உழக்கு – இவை அளவுப் பெயர்கள். கழஞ்சு, சீரகம், தொடி, பலம், நிறை, மா, வரை, அந்தை – இவை நிறைப்பெயர்கள்.

இவற்றையும் பிற நூற்பாக்களுக்குக் காட்டப்பட்டுள்ள மேற்கோள் அளவைப் பெயர்களையும் தொகுத்து அகர வரிசைப்படுத்திக் காணும் போது இளம் பூரணரின் கி.பி. 12 ஆம் நூற்றாண்டு வரையில் இருந்த அளவைப் பெயர்கள் பின்வருவன என உணர முடிகிறது.

அகல், அந்தை (நிறை அளவை), இதழ் (நில அளவை), உரி, உழக்கு, ஐயவி (கடுகு அளவு), ஐயவி (நிறை அளவை), கஃசு (நிறை அளவை), கலம், கழஞ்சு (நிறை அளவை), கா (நிறை அளவை), கொள் (நிறை அளவை), சாடி, சீரகம் (நிறை அளவை), தூணி, தூதை, தொடி (நிறை), நாடுரி, நாழி, நிறை (நிறை அளவை), பதக்கு, பலம் (நிறை அள்வை), பனை, பானை, மண்டை, மா (நிறை அளவை மற்றும் நில அளவை), முழம், வட்டி, வரை (நிறை அளவை), வேலி (நில அளவை), (நன்றி - விக்கிப்பீடியா)

### தமிழ் அளவை முறைகள்

பழந்தமிழர் அளவைகள், பெரும்பாலும் இக்காலத்திலும் உள்ள தமிழர் அளவைகள் ஆகும். அவை 1. எண்ணல், 2.நிறுத்தல், 3.முகத்தல், 4.பெய்தல், 5.நீட்டல், 6.தெறித்தல், 7. சார்த்தல் என்பனவாகும்.

**பழந்தமிழர் அளவைகள், பெரும்பாலும் இக்காலத்திலும் உள்ள தமிழர் அளவைகள் ஆகும். அவை எண்ணல், நிறுத்தல், முகத்தல், பெய்தல், நீட்டல், தெறித்தல், சார்த்தல் என்பனவாகும்.**

**1. எண்ணலளவை**

ஒன்று, இரண்டு, மூன்று என்ற எண்ணாகவோ வீசம், அரைக்கால், கால் என்ற இலக்கமாகவோ, அல்லது பதாதி சேனாமுகம், குமுதமெனத் தொகையாகவோ எண்ணிக் கணக்கிடுவது எண்ணல் அளவை ஆகும். இந்த எண்ணலளவை சிற்றிலக்கம், பேரிலக்கமென இரு வகைப்படுகிறது. இதுபற்றி ஆரம்பத்தில் விளக்கப்பட்டுள்ளது.

**2. நிறுத்தலளவை**

குன்றிமணி, வராகனெடை, பலம், வீசை, துலாமெனப்படிக்கல் கொண்டு தராசிலிட்டு நிறுப்பது நிறுத்தல் அளவை ஆகும்.

**3. முகத்தலளவை**

பால், மோர், நெய் போன்ற நீரியல் பொருளை உழக்கு படிகளால் மொண்டு எடுத்து அளப்பது முகத்தல் அளவை ஆகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12 மரணம்...

உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 15,255 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் கொரோனா தொற்று உறுதியான 827 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய, நாட்டில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 599,363 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## ராஜபக்ச...

தெரிவித்ததாவது,

"நாட்டிலுள்ள பிரச்சினைகள் இப்போது தீரவில்லை. ஆனால், பயங்கரவாதம், தேசிய பாதுகாப்பு என்று கூறி இவர்கள் ஆட்சிக்கு வந்தார்கள்.

இஸ்லாமிய சமூகத்தை இவர்கள் இப்போது துன்புறுத்துகின்றனர். உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்கு இன்னமும் பதில் கிடைவில்லை.

நாட்டில் வாழ முடியாது என்று இங்குள்ள இளைஞர்கள் வெளிநாட்டுக்குச் தப்பிச் செல்கின்றனர். இளைஞர்கள் இங்கு இல்லை என்றால் எதிர்காலத்தில் இந்த நாட்டைப் பாதுகாப்பது யார்?

வாழும் மக்களிடம் பணம் இல்லை, நாட்டில் டொலர் இல்லை. கொரோனாவைக் காரணம் காட்ட வேண்டாம். உலக நாடுகளும் கொரோனாத் தொற்றுக்கு இலக்காகியுள்ளன. ஆனால், அங்குள்ள மக்கள் வரிசையில் நிற்கவில்லை" என்றார். (ம)

## புலம்பெயர்...

க்கு பயணம் மேற்கொண்டுள்ள ஐக்கிய இராச்சியத்தின் தெற்காசிய மற்றும் பொதுநலவாய அபிவிருத்தி விவகாரங்களுக்கு பொறுப்பான அமைச்சர் தாரிக் அஹமட், நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவை சந்தித்தபோதே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை எதிர்நோக்கியுள்ள அனைத்து பிரச்சினைகளையும் தீர்த்து, ஒரே சமூகமாக வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்துவதே அரசின் இலக்கெனவும் இதன்போது ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ம)

காட்டிய அவர், ஐக்கிய இராச்சியத்தில் வாழும் பல்வேறு இனங்களைச் சேர்ந்தவர்கள் இலங்கையில் புதிய முதலீடுகளை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளனர் என்றும் தெரிவித்தார்.

இலங்கையின் சுகாதார ஊழியர்களுக்கு ஐக்கிய இராச்சியத்தில் தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. பொருளாதாரத் துறைக்கான ஒத்துழைப்புகளை மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதாகவும், லோர்ட் அவர்கள் உறுதியளித்தார்.

இலங்கையின் நெருங்கிய மற்றும் நடைமுறை நண்பராக ஒத்துழைக்க, ஐக்கிய இராச்சியம் எப்போதும் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார். (ம)

## நெருப்பில்...

தில் பரமேஸ்வரி நடராஜா (வயது- 69) என்ற வயோதிப மாதுவே தீயில் எரிந்து மரணமடைந்துள்ளார்.

வீட்டுக்கு சென்று சடலத்தை பார்வையிட்ட பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராசா விசாரணைகளை மேற்கொண்டதுடன் சடலத்தை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்து பிரேத பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு அறிவுறுத்தினார். (ம-60)

## திட்டமில்லாமல்...

ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

இந்த வருடத்திற்கான வரவு-செலவுத் திட்ட பற்றாக்குறை ஆயிரம் பில்லியன் ரூபாயாக உள்ளது. எனினும் தற்போதைய அரசாங்கம் பற்றாக்குறையை எவ்வாறு சமாளிப்பது என்பது குறித்த அதன் திட்டங்களை விபரிக்காமல் கூடுதல் நிதி கோரியுள்ளதாக ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார். (ம)

## தமிழர் விவகார...

னான நல்லுறவு மேம்பாடு தொடர்பிலும் இந்திய வெளிவிவகார அமைச்சர் இந்தப் பேச்சுக்களின்போது கூடுதல் கவனம் செலுத்தியுள்ளார் எனவும் நிதி அமைச்சர் பசில் ராஜபக்சவின் செயலாளர் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

இதன்போது இரு தரப்பு உறவுகளின் மேம்பாடு தொடர்பில் பேசப்பட்டது. இந்தியாவின் பொருளாதார உதவிகள் தொடர்பிலும் ஆராயப்பட்டது. தமிழர்கள் உட்பட நாட்டின் அனைத்து இனக்குழுமம் தொடர்பிலும் பேசப்பட்டது. அரசியல் ரீதியான விடயங்கள், பொருளாதாரம் மற்றும் அபிவிருத்தி தொடர்பிலும் ஆராயப்பட்டது.

இந்தப் பேச்சுக்களின்போது இந்திய மீனவர்களின் விடுதலை தொடர்பில் பேசப்பட்டது எனவும் நிதி அமைச்சர் பசில் ராஜபக்சவின் செயலாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)

## மனித உரிமை...

களுடன் முன்னோக்கிச் செல்வதன் மூலம் இலங்கையில் உள்ள அனைத்து மனித உரிமை பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கைக்கான முதலீட்டு வசதிகளை ஏற்படுத்[illegible] ளர்களை ஈர்க்க [illegible]

## தமிழர்களின்...

சந்தித்தார்.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளின் முன்னேற்றங்கள் மற்றும் சமகால விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

குறித்த சந்திப்பில் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் இலங்கைக்கான பிரித்தானிய தூதரும் கலந்துகொண்டனர். (ம-33)

## அரச கூட்டணி...

மையிலான அரச கூட்டணியில் அங்கம் வகித்தாலும், அரசின் செயற்பாடுகளை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கடுமையாக விமர்சித்து வருகின்றது.

அரசிலிருந்து வெளியேறுவது தொடர்பில் சுதந்திரக் கட்சிக்குள்ளும் கருத்து முரண்பாடுகள் நிலவுகின்றன. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து, ஆலோசனை பெறத் திட்டமிடப்பட்டுள்ளது. (ம)

## தமிழ்...

தீர்வு வழங்கப்படும். ஜனாதிபதியின் சிம்மாசன உரையில் வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் வாழ்வாதாரம் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு [illegible] அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஜனாதிபதியின் சிம்மாசன உரையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் எவ்வித விடயங்களும் குறிப்பிடப்படவில்லை என தமிழ் தேசிய கூட்டமைப்பினர் குற்றஞ்சாட்டியுள்ளார்கள்.

அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சிறந்த தீர்மானங்களை முன்னெடுத்துள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தவதற்கான அபிவிருத்தி திட்டங்களை செயற்படுத்த வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் மக்கள் பிரதிநிதிகள் அரசியல் வேறுபாடுகளை துறந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என ஜனாதிபதி விடுத்த அழைப்பினை தமிழ் அரசியல்வாதிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றார். (ம)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

**மெகா பவர்**
திகதி 20/01/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1001
வெற்றி எழுத்து U
சுப்பர் இலக்க 02
வெற்றி இலக்கங்கள் 05 09 42 55

**செவண**
திகதி 20/01/2022
சீட்டிழுப்பு இலக்கம் 345
ஆங்கில எழுத்து G
வெல்லப்பட்ட இலக்கங்கள் 31 32 70 89

**சுபிரி வாசனா**
சீட்டிழுப்பு திகதி 2022/01/20
சீட்டிழுப்பு இலக்கம் 1673
சுப்பர் இலக்கம் 13
வெற்றி இலக்கங்கள் 01 13 21 48

**மஹஜன சம்பத**
திகதி 2022/01/20
சீட்டிழுப்பு இலக்கம் 4653
ஆங்கில எழுத்து J
வெல்லப்பட்ட இலக்கங்கள் 9 5 2 3 2 9

**கொவிசெத** உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 20.01.2022
சீட்டிழுப்பு இலக்கம் 2948
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கங்கள் 17 28 66 69

**தன நிதானய**
திகதி - 2022.01.20
சீட்டிழுப்பு இலக்கம் - 683
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள் 06 45 78 79

**சனிதா** (Shanida)
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.01.20
சீட்டிழுப்பு இல: 3791
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,661,760/-
வெற்றி இலக்கங்கள் 23 44 47 56 N
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**அத கோடிபதி**
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1456
சீட்டிழுப்பு திகதி: 2022.01.20
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,354,360/-
வெற்றி இலக்கங்கள் 05 20 25 48 A
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**SUPER BALL**
சீட்டிழுப்பு வாரம் 1630
நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 20.01.2022
தினம் வியாழன்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் C 23 41 44 66
அடுத்த சுப்பர் ஜக்பொட் : 55,409,023/=

**සංවර්ධන වාසනාව**
திகதி : 2022-01-20
வெற்றி வாரம் : 478 | வர்ணம் : சிவப்பு
சுப்பர் ஜக்பொட் ரூ.12,742,524/-
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கங்கள் 32 26 61
விசேட இலக்கம் 8
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.2,253,200/-
ரூ.12,853,604/-

**ஜய**
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,719,907/=
திகதி 20.01.2022
வெற்றி வாரம் 3342
வர்ணம் கபில நிறம்
வெற்றி இலக்கங்கள் 12 23 42 52 விருச்சிகம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 12,758,147/=

**12 வஸனா**
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
H 30 41 45 51 52
சீட்டிழுப்பு வாரம் 806
வர்ணம் செம்மஞ்சள்
திகதி 2022.01.20 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 205,692,529/-
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**V.N அக்கடமி (சண்டிலிப்பாய்)**

நடாத்தும் உயர்தர தமிழ் பாட இறுதிக் கருத்தரங்கு

N. குகபரன் (யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி)

M. சுரேஸ் (மன்/ சென்.சேவியர் தேசியப் பாடசாலை)

காலம்

22.01.2022 சனிக்கிழமை
பி.ப 1 மணி - 5 மணிவரை
23.01.2022 ஞாயிற்றுக்கிழமை
காலை 9.30 மணி - 1.30 மணிவரை

(9745)

தொடர்புகளுக்கு:
இயக்குனர்
V.கஜரூபன்
077 500 5861

# மைத்திரியை நீக்க வேண்டும்

## சந்திரிகா குமாரதுங்க

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் இணைந்து கொண்டமைக்காக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கட்சியில் இருந்து நீக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

தாம் கட்டியெழுப்பிய ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷவும் மைத்திரிபால சிறிசேனவும் அழித்துவிட்டதாகவும் அவர் கூறியுள்ளார். (ம)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (9715)

076 825 7716 (ஆகாஸ்)

**Oblate Institute For Higher Education**
**DE Mazenod Campus (DMC)**

Approved by : TVEC (Tertiary and Vocational Education Commission)
Registered No :- P25/0105

அமல மரித்தியாகிகளின் (OMI Fathers) உயர்கல்வி நிலையம் நடாத்தும் கற்கைநெறிகள்

- From Basic Course to Diploma in English, Sinhala (அடிப்படை ஆங்கில, சிங்கள கற்கைநெறி தொடக்கம் டிப்ளோமா வரை)
- Information Technology - NVQ Level 3 தகவல் தொடர்பாடல்
- Writing and Spoken English - 100 Hours ஆங்கில எழுத்து மற்றும் பேச்சுப் பயிற்சி

வகுப்புகள் வார நாட்களிலும், வார இறுதி நாட்களிலும் நடைபெறும்.

ஒவ்வொரு மொழி கற்கைநெறியும் இக் கற்பித்தல் முறைகளை உள்ளடக்கியது

- Grammar
- Comprehension
- Spoken
- Composition
- Reading & Listening
- Literature

க.பொ.த சாதாரண தர, உயர்தர (O/l, A/L) பரீட்சை எழுதிய மாணவர்கள் முதல் அனைத்துத் தரப்பினரும் இக் கற்கைநெறிகளை மேற்கொள்ள முடியும்.

விண்ணப்பப் படிவங்களை தொடர்பக நூலகம் மற்றும் எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (9753)

No : 653/ A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | 076 262 6234 | oihe.jaffna@gmail.com

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் நாவற்குழி A32 மெயின் றோட்டில் 1ஆம் வீதியில் 12 பரப்புக் காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

நாவற்குழி சந்தியிலிருந்து 300 m தூரம்.
வீடமைப்பதற்கு நல்ல சூழல். (நிலப்பரப்பு)
ஒரு பரப்பின் விலை 5 இலட்சம்.

(9755)

077 288 0152,
077 911 6983

யாழ்ப்பாணத்தில் படிப்பு & கனடாவில் வேலை

மேலதிக விபரங்களுக்கு (C-3577)

21,22,23 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் சர்வதேச கண்காட்சியில் STALL-C19

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம்
777-068-777

விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

UK-975/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-3578)

0768226240 DHL

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணத்தில் இருந்து நுணாவில் செல்லும் A9 பிரதான வீதியில் நல்ல தண்ணீர் பொதுக்கிணற்றடி அருகாமையில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- நிலப்பரப்பு 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- 14 அடி பாதையுடன்
- கைதடி பிள்ளையார் கோயிலில் இருந்து 500 மீற்றர் தூரம்

பார்வையிடும் நேரம்:-

காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
தரகர் தேவையில்லை,
விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

077 814 7389, 077 614 7333

யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி செல்லும் பிரதான வீதியில் தனங்கிளப்பு கண்ணகை அம்மன் கோவில் வீதியில் 13 பரப்புக் காணி புதிய வீட்டுடன் நல்ல தண்ணீர் கட்டுக் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு)

- A32 பிரதான வீதியில் இருந்து 700 மீற்றர் தூரம்.
- முற்றிலும் பயன்தரும் 50 தென்னைகள் உள்ளன.
- 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- 14 அடிப் பாதையுடன்

பார்வையிடும் நேரம்

காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
தரகர் தேவையில்லை.
ஒரு பரப்பின் விலை 3 இலட்சம்.

(9752)

தொடர்புகளுக்கு:-

077 117 8578 | 077 814 7389

jitf.lk
www.jitf.lk

**இன்று ஆரம்பம்**

வாருங்கள்!

12ம் யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை

JITF 2022

CONCURRENTLY WITH
Higher Education & Career Exhibition
KALVI JAFFNA 2022

21 22 23 ஜனவரி JANUARY

(C-3576)

10.00 மு.ப - 8.00 பி.ப
முற்றவெளி மைதானம்
(யாழ் கோட்டைக்கு அருகில்)

ORGANIZED UNDER HEALTH GUIDELINES
சுகாதார வழிகாட்டுதல்களின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டது

MAIN SPONSOR: INSEE CEMENT
ORGANIZED BY: LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED
IN ASSOCIATION WITH: CCIY

CO - SPONSOR: SLTMOBITEL The Connection

OFFICIAL PARTNERS
SAFETY & HYGIENE: SUN
FOOD
PRINT MEDIA: உதயன்
ELECTRONIC MEDIA: DAN

ENDORSED SUPPORTED BY — EDB
PARTNER COUNTRY: India

For more information:
Imalka +94 71 7488107
imalka@saexhibitions.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.